அலகு – 18

# தமிழர் வணிகம், தொல்லியல் ஆய்வுகள் மற்றும் கடற் பயணங்கள்

## 1. தமிழர் வணிகம்

### வளரும் வணிகம்

மனிதன் தனக்குத் தேவையான எல்லாப் பொருள்களையும் தானே உற்பத்தி செய்து கொள்ள முடியாது. தனக்குத் தேவையான சில பொருள்களை உற்பத்தி செய்யும் பிறரிடமிருந்து வாங்குவான். தான் உற்பத்தி செய்யும் பொருள்களில் சிலவற்றைப் பிறருக்கு விற்பான். இவ்வாறு ஒரு பொருளைப் பிறரிடம் இருந்து வாங்குவதும் பிறருக்கு விற்பதும் வணிகம் ஆகும். பொருள்களை விற்பவரை வணிகர் என்பர்; வாங்குபவரை நுகர்வோர் என்பர்.

### பண்டமாற்று வணிகம்

நம்மிடம் கூடுதலாக இருக்கும் பொருள்களைக் கொடுத்து நமக்குத் தேவையான பொருள்களைப் பெற்றுக் கொள்வது பண்டமாற்று வணிகம் ஆகும். நெல்லைக் கொடுத்து அதற்குப் பதிலாக உப்பைப் பெற்றனர். ஆட்டின் பாலைக் கொடுத்துத் தானியத்தைப் பெற்றனர். இந்தச் செய்திகள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. இக்காலத்தில் கூட வீட்டிற்கே வந்து பழைய செய்தித்தாள்கள் , பயனற்ற நெகிழிப் பொருள்கள் போன்றவற்றைப் பெற்றுக்கொள்கின்றனர். அதற்குப் பதிலாக வீட்டிற்குப் பயன்ப டும் பொருள்களைத் தருகின்றனர்.

### வணிகத்தின் வகைகள்

வணிகத்தைத் தரைவழி வணிகம், நீர்வழி வணிகம் எனப் பிரிக்கலாம். தரைவழியாகப் பொருள்களைக் கொண்டு செல்ல எருது, கழுதை, குதிரை போன்ற விலங்குகளும் வண்டிகளும் பயன்படுத்தப்பட்டன. வணிகர்கள் வண்டிகளில் பொருள்களை ஏற்றி வெளியூருக்குச் செல்லும் போது குழுவாகவே செல்வார்கள். இக்குழுவை வணிகச்சாத்து என்பர். கடல்வழியாகக் கப்பல்கள் மூலம் பொருள்களை அனுப்புவதும் வரவழைப்பதும் நீர்வழி வணிகம் ஆகும். கப்பல்கள்

வந்து நின்றுபோகும் இடங்கள் துறைமுகங்கள் ஆகும். துறைமுக நகரங்கள் பட்டினம் என்றும் பாக்கம் என்றும் குறிக்கப்பட்டன.

தமிழ்நாட்டின் தலைசிறந்த துறைமுகமாகப் பூம்புகார் விளங்கியது. அவ்வூர்த் துறைமுகத்தில் பல்வேறு நாட்டுக் கப்பல்கள் தத்தம் நாட்டுக் கொடிகளோடு வந்து நின்றன. அவற்றின் மூலம் வெளிநாட்டுப் பொருள்கள் இறக்குமதி செய்யப்பட்டன. தமிழ்நாட்டுப் பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன.

வணிகத்தைத் தனிநபர் வணிகம், நிறுவன வணிகம் என்றும் பிரிக்கலாம். தனிநபரால் உருவாக்கப்பட்டு நடத்தப்படும் வணிகம் தனிநபர் வணிகம் ஆகும். ஒன்றுக்கும் மேற்பட்டோர் இணைந்து முதலீடு செய்து நடத்துவது நிறுவன வணிகம் ஆகும்.

**சிறுவணிகம்**

நம் அன்றாடத் தேவைகளான பால், கீரை, காய்கறிகள் போன்றவற்றை விற்பனை செய்பவர்கள் சிறு வணிகர்கள் ஆவர். இவர்கள் சிறு முதலீட்டில் பொருள்களை வாங்கி வந்து வீதிகளில் வைத்து விற்பனை செய்வர். தலையில் சுமந்து சென்று விற்றல், தரைக்கடை அமைத்து விற்றல், தள்ளுவண்டி மூலம் விற்றல் போன்ற முறைகளில் சிறு வணிகம் நடைபெறுகிறது. சிறு வணிகர்கள் நுகர்வோரிடம் நேரடித் தொடர்பு கொள்பவர்கள் ஆவர்.

**பெருவணிகம்**

பெருந்தொகையை முதலீடு செய்து பொருள்களை அதிக அளவில் திரட்டி வைத்து விற்பனை செய்வது பெருவணிகம் ஆகும். பெருவணிகர்கள் பொருள்கள் உற்பத்தி செய்யப்படும் இடத்தில் இருந்து மொத்தமாகக் கொள்முதல் செய்வர். அவற்றைச் சிறுவணிகர்களுக்கு விற்பனை செய்வர். பெருவணிகர்களுக்கு நுகர்வோருடன் நேரடித் தொடர்பு இருப்பது அரிது.

**ஏற்றுமதியும் இறக்குமதியும்**

ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களைப் பிற நாடுகளுக்கு அனுப்புவது ஏற்றுமதி எனப்படும். பிற நாடுகளில் இருந்து பொருள்களை வாங்குவது இறக்குமதி ஆகும். பழங்காலத்தில் தமிழ்நாட்டில் இருந்து தேக்கு, மயில்தோகை, அரிசி, சந்தனம், இஞ்சி, மிளகு போன்றவை பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.

சீனத்திலிருந்து கண்ணாடி, கற்பூரம், பட்டு போன்றவை இறக்குமதி செய்யப்பட்டன. அரேபியாவில் இருந்து குதிரைகள் வாங்கப்பட்டன.

**வணிகத்தில் நேர்மை**

அக்கால வணிகர்கள் நேர்மையாகத் தொழில் செய்தனர் என்பதைத் தமிழ் இலக்கியங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்

பிறவும் தமபோல் செயின் திருக்குறள் - 120

என்னும் திருக்குறள் வணிகரின் நேர்மையைப் பற்றிக் கூறுகிறது. வணிகர்கள் பொருளை வாங்கும்பொழுது உரிய அளவைவிட அதிகமாக வாங்க மாட்டார்கள். பிறருக்குக் கொடுக்கும் பொழுது அளவைக் குறைத்துக் கொடுக்கமாட்டார்கள். எனவே வணிகரை

'நடுவு நின்ற நன்னெஞ்சினோர்'

என்று பட்டினப்பாலை பாராட்டுகிறது.

**இணையவழி வணிகம்**

கடைகளுக்குச் சென்று பொருள்களை வாங்க நேரம் இல்லாதவர்களுக்கு இணையவழி வணிகம் உதவுகிறது. இணையத்தளம் மூலம் பொருள்களை விற்பனை செய்யும் நிறுவனங்கள் பல உள்ளன. இவற்றின் இணையத்தளப் பக்கத்தில் நமக்குத் தேவையான பொருள்களைப் பற்றிய விவரங்கள் இருக்கும். பொருள்களின் தரம், விலை, சிறப்பு ஆகியவற்றைப் பிற நிறுவனப் பொருள்களோடு ஒப்பிட்டுப் பார்க்கலாம். நமக்குப் பிடித்த பொருள்களை நம் வீட்டிற்கே வரவழைக்கலாம். பொருளைப் பெற்றுக் கொண்ட பிறகு பணம் செலுத்தலாம். மின்னணுப் பரிமாற்றம் மூலமும் பணத்தைச் செலுத்தலாம்.

வணிகம் பண்டமாற்று முறையாகத் தொடங்கியது. பணத்தைப் பயன்படுத்தும் முறையாக வளர்ந்தது. இன்று மின்னணுப் பரிமாற்றம் செய்யும் அளவுக்கு உயர்ந்துள்ளது. வருங்காலத்தில் வணிகத்தில் இன்னும் பல புதுமைகள் வரக்கூடும்.

**கொங்குநாட்டு வணிகம்**

தொல்காப்பியமும் சங்க இலக்கியங்களும் தமிழகத்தைச் சேர, சோழ, பாண்டியர்களுக்கு உரியதாகக் கூறுகின்றன. வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு என்று தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது. மூவேந்தர்களின் காலத்தை வரையறுத்துக் கூறமுடியவில்லை. வால்மீகி இராமாயணம், மகாபாரதம், அர்த்தசாத் திரம், அசோகர் கல்வெட்டு ஆகியவற்றில் மூவேந்தர்கள் குறித்த செய்திகள் இடம்பெற்றுள்ளன. இதனால் இவர்கள் பன்னெடுங் காலத்திற்கு முற்பட்டவர்கள் என்பதை அறியலாம்.

**சேரர்**

முடியுடைய மூவேந்தர்களில் சேரர்களே பழமையானவர்கள் என்று கூறுபவர் உண்டு. சேர, சோழ, பாண்டியர் என்னும் தொடரையே இதற்குச் சான்றாகக் காட்டுவர். மேலும் தொல்காப்பியமும் போந்தை வேம்பே ஆரென வரூஉம் மாபெருந் தானையர் மலைந்த பூவும் எனச் சேரரை முன் வைக்கின்றது.

சேரர்களின் நாடு குடநாடு எனப்பட்டது. இவர்களின் தலைநகராக வஞ்சி விளங்கியது. இந்நகர் மேற்கு மலைத்தொடரில் தோன்றி அரபிக்கடலில் கலக்கும் பேரியாற்றங்கரையில் இருந்தது. இதனைக் கருவூர் என்றும் அழைப்பர். தொண்டி, முசிறி, காந்தளூர் என்பன சேரநாட்டின் துறைமுகப் பட்டினங்களாக விளங்கின. சேரர்களின் கொடி விற்கொடி ஆகும். பனம்பூ இவர்களுக்குரிய பூ ஆகும்.

**சேர நாட்டின் எல்லைகள்**

பண்டைய சேர நாடு என்பது இன்றைய கேரளப் பகுதிகளும் தமிழ்நாட்டின் சேலம், கோவை மாவட்டங்களின் பகுதிகளும் இணைந்த பகுதியாக விளங்கியது என்பர். சேலம், கோவைப் பகுதிகள் கொங்கு நாடு என்று பெயர்பெற்றன. இப்பகுதிகளைச் சேரர்களின் உறவினர்கள் ஆட்சி செய்து வந்தனர்.

**கொங்கு மண்டலம்**

கார்மேகக் கவிஞர் இயற்றிய கொங்கு மண்டலச் சதகம் என்னும் நூலில் வடக்கே பெரும்பாலை, தெற்கே பழனிமலை, மேற்கே வெள்ளிமலை, கிழக்கே மதிற்கரை

என இந்நான்கு எல்லைகளுக்குட்பட்ட பகுதியாகக் கொங்குமண்டலம் விளங்கியதாகக் கூறப்படுகிறது. இன்றைய நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, நாமக்கல், திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களையும் சேலம், கரூர் மாவட்டங்களின் சில பகுதிகளையும் உள்ளடக்கியதாகக் கொங்குமண்டலம் விளங்கியது என்பர்.

கொங்குநாட்டுப் பகுதியை காவிரி, பவானி, நொய்யல், ஆன்பொருநை என்று அழைக்கப்படும் அமராவதி ஆகிய ஆறுகள் வளம் செழிக்கச் செய்கின்றன.

**பழங்கால வணிகம்**

உழவு, கைத்தொழில், வணிகம் என்னும் மூன்றும் ஒரு நாட்டு மக்களின் நாகரிக நல்வாழ்விற்கு அடிப்படைகளாகும் என்பர். உள்நாட்டு, வெளிநாட்டு வணிகத்தில் தமிழர்கள் சிறந்து விளங்கியுள்ளனர். கடல் வணிகத்தில் சேரநாடு சிறப்புற்றிருந்தது. அதற்கு அந்நாட்டின் இயற்கை அமைப்பே காரணமாக அமைந்திருந்தது. சேரர்கள் வலிமை மிகுந்த கப்பல் படையை வைத்திருந்தனர். செங்குட்டுவனின் கடற்போர் வெற்றியால் அவன் கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன் என்று அழைக்கப்பட்டான். கடம்பர் என்னும் கடற்கொள்ளையர்களைச் சேரமன்னர்க ள் அடக்கினர். முசிறி சேரர்களின் சிறந்த துறைமுகங்களுள் ஒன்றாக விளங்கியது. இங்கிருந்துதான் மற்ற நாடுகளுக்கு மிளகு, முத்து, யானைத் தந்தங்கள், பட்டு, மணி போன்றவை ஏற்றுமதி செய்யப்பட்டன. பொன், மென்மைமிக்க புடவைகள், சித்திர வேலைப்பாடமைந்த ஆடைகள், பவளம், செம்பு, கோதுமை ஆகியன இறக்குமதி செய்யப்பட்டன. இச்செய்தியை,

மீனோடு நெற்குவைஇ

மிசையம்பியின் மனைமறுக்குந்து

………

கலந்தந்த பொற்பரிசம்

கழித்தோணியால் கரைசேர்க்குந்து – புறம் 343 : 1- 8

என்னும் பாடல் விளக்குகிறது.

சேரநாட்டில் உள்நாட்டு வணிகமும் நன்கு வளர்ச்சியுற்றிருந்தது. மக்கள் தத்தம் பொருள்களைத் தந்து தமக்குத் தேவையான பொருளைப் பெற்றனர். நெல்லே விலையைக் கணக்கிட அடிப்படையாக இருந்தது என்பர். உப்பும் நெல்லும் ஒரே மதிப்புடையனவாக இருந்தன என்பதை,

நெல்லும் உப்பும் நேரே ஊரீர்

கொள்ளீ ரோவெனச் சேரிதொறும் நுவலும் – (அக. 390)

என்னும் அகப்பாடல் மூலம் அறியலாம்.

**கொங்கு மண்டலப் பகுதிகளில் இன்றைய வணிகம்**

**நீலகிரி**

கிழக்குத் தொடர்ச்சி மலையும் மேற்குத் தொடர்ச்சி மலையும் சந்திக்கும் இடமே நீலகிரி ஆகும். இம்மாவட்டம் முழுவதும் மலைப் பகுதியாலானது. காடுகள் நிறைந்த இம்மாவட்டத்தில் தோட்டப்பயிர்களான காப்பி, தேயிலை, உருளைக்கிழங்கு, கேரட், முட்டைகோசு ஆகியவை பெருமளவில் பயிரிடப்படுகின்றன; தைலமரம் (யூகலிப்டஸ்) வளர்க்கப்ப டுகிறது.

நீலகிரி மாவட்டம் தேயிலைத் தொழிற்சாலைகள் நிறைந்தது. புகைப்படச் சுருள் தயாரிப்புத் தொழிற்சாலை, துப்பாக்கி வெடிமருந்துத் தொழிற்சாலை, தைலமரம் (யூகலிப்டஸ்) எண்ணெய்த் தொழிற்சாலை ஆகியனவும் உள்ளன.

**கோயம்புத்தூர்**

கோவன்புத்தூர் என்னும் பெயரே கோயம்புத்தூர் என்று மருவி வழங்கப்பட்டு வருகிறது. இம்மாவட்டத்தில் நெல், வாழை, கரும்பு, காய்கறிகள், பூக்கள் போன்றவை பெருமளவில் பயிரிடப்படுகின்றன. பஞ்சாலைகள், நூற்பாலைகள், மின்சாரப் பொருள்கள், எந்திரங்கள், வீட்டுஉபயோகப் பொருள்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் இம்மாவட்டத்தில் நிறைந்துள்ளன.

**திண்டுக்கல்**

வரலாற்றுச் சிறப்புமிக்க திண்டுக்கல்லில் நெல், சோளம், தினை வகைகள், வாழைப்பழம், காய்கறிகள் போன்றவை விளைவிக்கப்படுகின்றன. இப்பகுதி மலர் உற்பத்தியில் முதலிடம் வகிக்கின்றது. எனவே தமிழ்நாட்டின் ஹாலந்து என்றும் சிறப்பிக்கப்படுகிறது.

அரிசி, தோல், பூட்டுத் தொழிற்சாலைகள் நிறைந்த மாவட்டம் இது. இங்குள்ள சின்னாளபட்டிச் சுங்குடிச் சேலைகள் புகழ்பெற்றவை .

**ஈரோடு**

பரப்பளவில் ஈரோடு தமிழ்நாட்டின் இரண்டாவது பெரிய நகரமாக விளங்குகிறது. இம்மாவட்டத்தில் நெல், நிலக்கடலை, மஞ்சள், கரும்பு, பருத்தி, எள் போன்றவை பயிரிடப்படு கின்றன. தமிழகத்திலேயே மஞ்சள் சந்தை ஈரோட்டில் தான் நடைபெறுகின்றது.

துணி நூற்பாலைகள், எண்ணெய் ஆலைகள், சர்க்கரை ஆலைகள் பெருமளவில் உள்ளன. நூல் நூற்பு, துணிகளுக்குச் சாயம் ஏற்றுதல், அச்சிடுதல், தோல் பதனிடுதல் முதலான தொழில்களும் இம்மாவட்டத்தில் நடைபெறுகின்றன.

**திருப்பூர்**

இன்று திருப்பூர் மிகச்சிறந்த பின்னலாடை நகரமாக விளங்குகிறது. நெல், கரும்பு, பருத்தி, வாழை போன்றவை இங்கு விளைவிக்கப்படும் முதன்மையான பயிர்களாகும். இம்மாவட்டம் பின்னலாடைகள், ஆயத்த ஆடைகள் மூலம் தமிழ் நாட்டிற்குப் பெரும் வருவாயை ஈட்டித்தருகிறது. இந்தியாவின் முதல் ஆயத்த ஆடைப் பூங்காவான நேதாஜி ஆயத்த ஆடை பூங்கா இம்மாவட்டத்தில் அமைந்துள்ளது. தேசிய அளவில் புகழ்பெற்ற காங்கேயம் காளைகள் இம்மாவட்டத்திற்குப் பெருமை சேர்க்கின்றன.

**நாமக்கல்**

பச்சைமலை, கொல்லிமலை, சேர்வராயன் மலையின் ஒரு பகுதி ஆகியவை இம்மாவட்டத்தில் உள்ளன. நெல், கரும்பு, சோளம், நிலக்கடலை, பருத்தி

ஆகியவற்றுடன் மலைப்பகுதிகளில் விளையும் திராட்சை, ஆரஞ்சு, காப்பி, பாக்கு, ஏலம் போன்றவை யும் பயிரிடப்படுகின்றன.

முட்டைக்கோழி வளர்ப்பிலும் முட்டை உற்பத்தியிலும் தென்னிந்தியாவிலேயே நாமக்கல் முதன்மையான இடம் வகிக்கின்றது. இங்கே சிமெண்ட், காகிதத் தொழிற்சாலைகள் உள்ளன. கைத்தறி நெசவு, வெண்கலப் பொருள்கள் செய்தல் முதலான தொழில்களும் நடைபெறுகின்றன. சிற்றுந்து, சரக்குந்து ஆகியவை அதிக அளவில் இயங்கும் மாவட்டமாக நாமக்கல் விளங்குகிறது.

**சேலம்**

மாங்கனி நகரம் என்னும் சிறப்புப் பெயர் கொண்டது சேலம். இம்மாவட்டத்தில் நெல், பருப்பு வகைகள், பருத்தி, கரும்பு, மாம்பழம், காப்பி, பாக்கு ஆகியன பயிரிடப்படுகின்றன. இந்தியாவிலேயே இம்மாவட்டத்தில்தான் ஜவ்வரிசி அதிக அளவு உற்பத்தி செய்யப்படுகின்றது. தமிழ்நாட்டில் கைத்தறி நெசவு அதிகமாக உள்ள மாவட்டம் இதுவே. இங்குப் பால் பண்ணைத் தொழிலும் சிறப்பாக நடைபெறுகின்றது. இரசாயனப் பொருள், அலுமினியம், சந்தன எண்ணெய், வனஸ்பதி ஆகியவை தயாரிக்கும் ஆலைகள் நிறைந்த மாவட்டமாகவும் சேலம் விளங்குகிறது. முலாம் பூசும் தொழிலும் பெருமளவில் நடைபெறுகிறது. ஏழைகளின் ஊட்டி என்று அழைக்கப்ப டும் ஏற்காடு இம்மாவட்டத்தில் அமைந்துள்ளது.

**கரூர்**

கொங்கு நா ட்டின் ஒரு பகுதியாக விளங்கிய இப்பகுதிக்கு ‘வஞ்சிமாநகரம்’ என்னும் பெயரும் உண்டு. கிரேக்க அறிஞர் தாலமி, கரூரைத் தமிழகத்தின் முதன்மையான உ ள்நாட்டு வணிக மையமாகக் குறிப்பிட்டுள்ளார்.

நெல், சோளம், கேழ்வரகு, கம்பு, கரும்பு போன்றவை இங்குப் பயிரிடப்படுகின்றன. கல்குவாரித் தொழிற்சாலைகள் இங்கு உள்ளன. கைத்தறி நெசவு ஆடைகளுக்குப் பெயர்பெற்ற மாவட்டமாகக் கரூர் விளங்குகிறது. தோல் பதனிடுதல், சாயமேற்றுதல், கற்சிற்ப வேலைகள் போன்ற தொழில்களும் நடைபெறுகின்றன. பேருந்துக் கட்டுமானத் தொழிலின் சிகரமாகக் கரூர் விளங்குகிறது.

**ஊர்களும் சிறப்புப் பெயர்களும்**

**தூத்துக்குடி – முத்து நகரம்**

**சிவகாசி – குட்டி ஜப்பான்**

**மதுரை – தூங்கா நகரம்**

**திருவண்ணாமலை – தீப நகரம்**

## 2. தொல்லியல் ஆய்வுகள்

### அகழாய்வுகள்

அறிமுகவுரை ( இலக்கிய மன்றச் செயலர்)

அன்பிற்குரிய நல்லுள்ளங்களே! வணக்கம். இன்று நம் பள்ளியில் இலக்கிய மன்றத் தொடக்கவிழா இனிதே தொடங்குகிறது. அதனை முன்னிட்டு நடைபெறவுள்ள பட்டிமன்றத் தலைப்பினை அறிய ஆவலாக இருக்கிறதா? இதோ சொல்கிறேன். இன்றைய சூழ்நிலையில் அகழாய்வு என்பது தேவையான செயல்பாடா? தேவையற்ற செலவினமா? (மாணவர்கள் கரவொலி எழுப்புதல்)

அண்மை யில் நடைபெற்ற மாநில அளவிலான பேச்சுப்போட்டியில் முதல் பரிசுபெற்ற நம் வகுப்புத்தோழர் பூங்குன்றன் நடுவராகப் பொறுப்பேற்கிறார். வாதிடுவோராக நம்முடன் பயிலும் முத்து, பாத்திமா, அன்புமேரி, செல்வன் ஆகியோர் பங்கேற்கின்றனர். இதோ பட்டிமன்றம் தொடங்குகிறது.

### நடுவர்

அருந்தமிழ் வணக்கம்.

மதிப்பிற்குரிய தமிழாசிரியர் அவர்களே! அன்பிற்குரிய ஆசிரியப் பெருமக்களே ! அருமை மாணவ நண்பர்களே! அனைவருக்கும் அன்பான வணக்கம்.

வரலாற்றை அறிவதற்கு வழிகாட்டும் ஒரு தலைப்பெடுத்துப் பேச முனைகின்றோம். ஒரு செடி வளர்வதற்கு, விதையை ஊன்றுவதற்குக்கூடக் குழி தோண்டுகிறோம். தோண்டிய குழிக்குள் ஒரு பழம்பொருள் கிடைத்தால்கூடக்

கொண்டாடுகிறோம். அதில் பயன் இருக்கிறதா என்பதைச் சிந்திப்பதற்கே இந்த மாபெரும் சிந்தனைப் பட்டிமன்றம்.

ஆய்வு என்பது அறிவின் வெளிப்பாடு. அதற்கு ஓய்வு என்பதே கிடையாது. இதோ! இன்றைய சூழ்நிலையில் அகழாய்வு என்பது தேவையற்ற செலவினமே! என்னும் தலைப்பில் உரைவீச்சைத் தொடங்க வருமாறு அன்புத் தோழர் முத்து அவர்களை அழைத்து என் முன்னுரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மாணவர் கரவொலி)

**முத்து**

உங்கள் அனைவருக்கும் என் பணிவான வணக்கம். நடுவர் அவர்களே! உள்ளங்கை யில் உலகத்தை அளந்து பார்க்கும் காலகட்டத்தில் மண்ணைத் தோண்டி எலும்புகளைத் தேடும் மனிதர்களைப் பற்றி நான் என்ன சொல்ல?

அறிவியல் உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பழைய தலைமுறையைப் பற்றித் தெரிந்து என்ன செய்யப் போகிறோம்? செல்லிடப் பேசிக்குள்ளே, உலகத்தைச் சுற்றும் வேளையில் அகழாய்வில் கிடைக்கும் செல்லாக் காசுகளை வைத்து என்ன செய்வதாம்?

வானுலகத்தில் பறந்து செவ்வாயில் குடியேற வழிதேடும் நேரத்தில் பழைய வரலாற்றுக்கு முந்தைய காலத்தைப் பற்றி அறிந்து என்ன பயன்? உள்ளங்கையில் உலகம் இருக்கிறது. மடிக்கணினி மலைக்க வைக்கிறது. அதையெல்லாம் விட்டுவிட்டு மண் ஓடுகள், இறந்தோரைச் சுமந்த மண்தாழிகள் இவற்றைக் கண்டறிந்து எதைச் சாதிக்கப் போகிறோம்?

நாம் கண்டுபிடிக்க வேண்டியவை எவ்வளவோ இருக்கின்றன. அறிவை விரிவுசெய் எனப் பாவேந்தர் கூறினார். நாம் அறிவை வீணாக்கிக் கொண்டிருக்கிறோம். எனவே, நடுவர் அவர்களே! அகழாய்வு என்பது தேவையற்ற செலவினமே, தேவையற்ற செலவினமே என்றுகூறி என் வாதத்தை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**நடுவர்**

நண்பர் முத்து, காரசாரமான தன் வாதத்தை முன்வைத்தார். மிகவும் அருமை. இதற்குப் பாத்திமா, எப்படித்தான் பதில் சொல்லப் போகிறார் என்பது தெரியவில்லை. வாங்கம்மா! வாங்க எப்படிச் சமாளிக்கப் போறீங்க!

**பாத்திமா**

அவையோரை வணங்கி என் உரையைத் தொடங்குகிறேன்.

மண்ணைத் தோண்டிப் பார்ப்பது எலும்புகளைச் சேகரித்து எண்ணிப் பார்ப்பதற்கன்று. நம் முன்னோர்களின் பண்பாட்டை எண்ணிப்பார்ப்பதற்கு. கடந்த காலத்தைப் புரிந்துகொள்ளாமல் நிகழ்காலத்தில் வெற்றிபெற முடியுமா? எதிர்காலத்தைத்தான் கணிக்க இயலுமா?

நமது வரலாறு மிக நீண்டது. 150 ஆண்டுகளுக்கு முன்னால் 1863 ஆம் ஆண்டு இராபர்ட் புரூஸ்புட் என்னும் தொல்லியல் அறிஞர் சென்னைப் பல்லாவரம் செம்மண் மேட்டுப்பகுதியில் எலும்பையும் கற்கருவியையும் கண்டுபிடித்தார். இந்தக் கற்கருவிதான் இந்தியாவில் கண்டெடுக்கப்பட்ட முதல் கல்லாயுதம். இந்தக் கல்லாயுதம் கண்டுபிடி க்கப்படுவதற்கு முன்பே , ரோமானியர்களின் பழங்காசுகளைக் கோவையில் கண்டெடுத்தோம்.

அரிக்கமேடு அகழாய்வில் ரோமானிய மட்பாண்டங்கள் கிடைத்தன. அதனால், ரோமானியர்களுக்கும் நமக்கும் இருந்த வணிகத் தொடர்பு உறுதிப்படுத்தப்பட்டது.

அதற்குப் பின்னால், 1914ஆம் ஆண்டு ஆதிச்சநல்லூரில் நடத்தப்பட்ட அகழாய்வில் ஏராளமான முதுமக்கள் தாழிகள் கண்டுபிடிக்கப்பட்டன. நண்பர் சொன்னார்! உள்ளங்கையில் உலகம் இருக்கிறதாம். மடிக்கணினி மலைக்க வைக்கிறதாம். நம் முன்னோர்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, அறிவியல் அடிப்படையிலான பண்பாட்டு வாழ்க்கையை வாழ்ந்தவர்கள். தமிழர்களின் உணவு, உடை, வாழிடம் முதலியன இயற்கையைச் சிதைக்காத இயல்புகளைக் கொண்டவை என்பதற்கு அகழாய்வில் கண்ட சான்றுகளே ஆவணங்களாகத் திகழ்கின்றன.

எதிரணித் தலைவருக்கு ஒன்றைச் சொல்லி விடைபெறுகிறேன். மடிக்கணினியில் பூக்கின்ற ரோஜா மணக்காது; செல்லிடப் பேசியில் பார்க்கும் வற்றல் குழம்பு சுவைக்காது; மாறாக நமது மூளையைக் குப்பைத்தொட்டியாக்கும்; நமது மண்ணை நெகிழிக் கிடங்காக மாற்றும். ஆனால், அகழாய்வில் கிடைத்த ஆவணங்களோ அடுத்த தலைமுறைக்கு நம் பண்பாட்டின் மேன்மையைப் பறைசாற்றும். எனவே, நடுவர் அவர்களே! அகழாய்வு என்பது நமக்கு மிகமிகத் தேவையான செயல்பாடே! என்றுகூறி நல்ல தீர்ப்பு வேண்டி விடைபெறுகின்றேன்.

**நடுவர்**

அடேயப்பா ! பாத்திமாவி ன் வார்த்தைகளுக்குள் மின்னிய வரலாறு புதிய வெளிச்சத்தைக் காட்டியது. என்ன அன்புமேரி! என்ன செய்யப் போறீங்க? பேசத்தான் போறீங்களா? இல்லை பட்டி மன்றத்தை இப்படியே முடிச்சிட்டுத் தீர்ப்பைச் சொல்லிவிடட்டுமா?

**அன்புமேரி**

பாரதியை வணங்கித் தொடங்குகின்றேன்.

ஐயா, நடுவர் அவர்களே! எங்க ஊர்ல ஒரு சொலவடை சொல்லுவாங்க. பகுமானக் கோழி பறந்துக்கிட்டே முட்டை போட்டுச்சாம்.

**நடுவர்**

என்ன! பகுமானக் கோழி பறந்துக்கிட்டே முட்டை போட்டுச்சா? சரி, தலைப்புக்கு வாங்கம்மா.

**அன்புமேரி**

இல்லைங்கய்யா, வெட்டிப் பெருமைக்காகவே வீறாப்பா பேசுபவர்களைப் பற்றிச் சொல்ல வந்தேன். நாம் எப்படிப்பட்ட காலத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம்? உலகத்தில் குட்டி நாடுகள்கூட அறிவியல் விந்தை களால் வானத்தை அளந்து பார்க்கின்றன. அமெரிக்காவில் இருக்கும் என் தோழியின் நட்பை இணையத்தளம் இணைத்துக் காட்டுகிறது. விபத்தில் துண்டிக்கப்பட்ட கால்களுக்கு

அறிவியல், செயற்கைக் கால் பொருத்தி அழகு பார்க்கிறது. பழுதுபட்ட இதயத்திற்கு மாற்று இதயம் பொருத்தி மருத்துவ அறிவியல் மனிதனை வாழவைக்கிறது.

புற்றுநோய் என்னும் அரக்கனை வீழ்த்த, புதிய மருந்து கண்டுபிடிக்க அறிவியலாளர்கள் பெருமுயற்சி மேற்கொண்டு வருகிறார்கள். இன்னும் எவ்வளவோ சாதனைகள் கண்முன்னே நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இந்த உலகப்போக்கிற்கு ஈடுகொடுத்து நாமும் நமது அறிவியல் பயணத்தை முன்னெடுக்காமல் அகழாய்வுக்குள் விழுந்து கிடப்பது என்ன நியாயம்? நானொன்றும் அகழாய்விற்கு எதிரானவள் இல்லை.

இன்றைய மாறிவரும் உலகச் சூழலில் அகழாய்வு என்ன, முக்கியத் தேவைகளுள் ஒன்றா? இருபத்தோராம் நூற்றாண்டு அறிவியலால் வியக்க வைக்கின்ற காலத்தில், இந்தப் பழைய காலத்துப் பொருள்களையும் கட்டடங்களையும் கண்டுபிடித்து என்ன சாதிக்கப் போகின்றோம்?

நடுவர் அவர்களே! பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே என்று நமது இலக்கணப் புலவர் ஒருவர் சொன்னதை எதிரணிக்கு நினைவூட்டி நல்ல தீர்ப்புத் தருமாறு கேட்டு விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**நடுவர்**

அருமை, அன்பு மேரி... அருமை. உங்களுக்கு ஆதரவா நன்னூலை இயற்றிய பவணந்தி முனிவரையும் துணைக்கு இழுத்து வந்துட்டீங்க. மிக்க மகிழ்ச்சி. இப்போ இந்த அணி கொஞ்சம் சோர்ந்து போனமாதிரி தெரியுது. நண்பர் செல்வன் வாங்க. எப்படிப் பதில் சொல்லப் போறீங்க.

**செல்வன்**

அவைக்கு என் பணிவான வணக்கத்தைக் கனிவோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

நடுவர் அவர்களே! அறிவியலைத் தலையில் தூக்கி வைத்துக் கொண் டு ஆடுகிறார் சகோதரி அன்புமேரி. ஏதோ, நாங்கள் எல்லாம் அறிவியலுக்குப் பகைவர் என்பதைப் போல. அகழாய்வே அறிவியலை அடிப்படையாகக் கொண்டதுதான்

என்பதை அறியாதவராக இருக்கின்றார். இதில் பவணந்தி முனிவரைவேறு சாட்சிக்கு இழுத்திருக்கிறார். பழைமையின் பட்டையை உரித்துக் கொண்டுதான் புதுமையே பிறக்கும். தனியாகப் புதுமைக்கென்று வேரோ விதையோ கிடையாது நண்பர்களே!

கடந்த காலத்தை ஆராய்ந்து அறிந்துகொண்டால்தான் நிகழ்காலத்தைச் செம்மைப்படுத்திக் கொள்ளலாம். வருங்காலம் வளமாக அமைவதற்கு வலிமையான கட்டமைப்பை உருவாக்கலாம். நமது முன்னோர்கள் வாழ்ந்து பெற்ற பட்டறிவை வகைப்படுத்தித் தொகுத்துப் பார்ப்பதற்குத் தொல்லியல் ஆய்வே பெரும் கல்வியாக அமைகின்றது.

வேடிக்கை என்னவென்றால், தமிழகத்தில் பண்டைக் காலத்திலேயே நமது தமிழ் முன்னோர்கள் செம்மையான பண்பாட்டுக் கட்டமைப்போடு வாழ்ந்திருக்கிறார்கள். நாம்தான் அந்தத் தொன்மை வரலாற்றின் உண்மையை அறியாமல் தொடர்ச்சி அறுபட்டு இடையில் எங்கோ பாதைமாறி, பயணித்துக் கொண்டிருக்கிறோம்.

இன்றைக்கு நாம் ஒரு புதிய நாகரிகச் சூழலைப் பழகிக் கொண்டிருக்கிறோம். அது என்னவென்றால், ஒரு பொருளை ஒருமுறை பயன்படுத்திவிட்டுத் தூக்கி எறி என்பதாகும். எழுதுகிற பேனா, குடிக்கிற தண்ணீர்ப்புட்டி, பழுதுபட்ட மடிக்கணினி, செல்லிடப்பேசி போன்றவற்றை ஒருமுறை பயன்படுத்தித் தூக்கி எறிகிற வழக்கத்தால் மின்சாதனக் குப்பைகள் மலையெனக் குவிந்துவிட்டன. சுற்றுச்சூழல் சிதைந்து புற்றுநோயாளிகள் பெருகும் அபாயம் வந்துவிட்டது. ஆனால், நமது முன்னோர்கள் கண்டுபிடித்துச் சுடு மண்ணிலும் உலோகத்திலும் செய்து பயன்படுத்திய பொருள்கள் பல தலைமுறைகளைக் கடந்தும் பயன்பாட்டில் இருந்திருக்கின்றன.

பழுதுபட்டால் சரி செய்து மீண்டும் பயன்படுத்துவோம். இது கடந்த நூற்றாண்டுவரை தொடர்ந்தது. எதிரணி கூறிய போலி அறிவியல் பண்பாட்டுச் சூழல் வளர்ந்த பின்தான் “பயன்படுத்து, தூக்கி எறி” என்ற பழக்கம் பிறந்து வளர்ந்தது. அதன் தொடர்ச்சி எதுவரை வந்தது தெரியுமா? பெற்றெடுத்து வளர்த்த தாய் தந்தையரையும் கூடப் பயன்படுத்திவிட்டு முதியோர் இல்லத்தில் தூக்கி எறிகிற மூடத்தனம் உருவாகியிருக்கிறது.

எனவே, நடுவர் அவர்களே! அகழாய்வு தரும் சான்றுகளின் மூலம் நமது வளமான வரலாற்றையும் பண்பாட்டையும் அறிந்துகொண்டு வலிமையான எதிர்கா லத்தை உருவாக்க முடியும். நெடிய வரலாறு நமக்கு இருக்கிறது. எனவே, அதனை உறுதியுடன் வலியுறுத்துகிறோம்.

நடுவர் அவர்களே! அகழாய்வு என்பது தேவையற்ற செலவினமல்ல. தேவையான செயல்பாடே! என்று திசைகள்தோறும் அறிவியல் குரல்கள் ஒலிக்கத் தொடங்கிவிட்டன. நல்ல தீர்ப்புத் தாருங்கள். நன்றி, வணக்கம்.

**நடுவர்**

செல்வனின் ஆய்வுக் கண்ணோட்டம் அருமையானது. அரிய செய்தி களோடு இரண்டு அணிகளும் வாதிட்டுள்ளன. 1863இல் ஆரம்பித்த அகழாய்வுப் பணி இன்றுவரையிலும் தொடரும்போது பல உண்மைகள் உறைக்கத் தொடங்கி இருக்கின்றன. பழையனவற்றை ஏன் தோண்டியெடுத்துப் பாதுகாக்க வேண்டும்? ஆராய வேண்டும்? அதற்கு நம் புழங்குபொருள் பண்பாடே சான்றாக நிற்கின்றது. தேவையற்ற செயல்பாடே! என்று பேசிய அணியினர் கூறியது போல அகழாய்வு என்பது அறிவியலுக்கு எதிரான சிந்தனை அன்று.

அறிவியலில் இரண்டு வகையுண்டு. ஒன்று வணிக அறிவியல். மற்றொன்று மக்கள் அறிவியல். வணிக அறிவியல், முதலீட்டைப் பெருக்குவதற்காகப் பொருள்களைக் கண்டுபிடிக்கிறது. அதனை விற்பனை செய்கிறது. அதன் விளைவுதான் நெகிழிக் குப்பைகள். ஆனால், அகழாய்வில் கிடைத்த சுடுமண், கல், இரும்பு, செம்பு ஆகியவற்றாலான புழங்கு பொருள்கள் , கருவிகள் பல நூற்றாண்டுகளாக வாழையடி வாழையாகப் பயன்பாட்டில் இருந்தன. இயற்கையோடு இணைந்த பண்பாட்டு வாழ்க்கை நம்முடையது என்பதனை அறிந்துகொண்டோம். இதுவே, மக்கள் அறிவியல்.

மக்கள் அறிவியல் என்கிற மகத்தான சிந்தனையைப் புரிந்துகொள்வதற்கும் நமது பண்பாட்டின் மேன்மைகளை இன்றைய தலைமுறை எடுத்துக்கொண்டு சிறப்பாக வாழ்வதற்கும் அகழாய்வு துணைநிற்கின்றது.

எனவே, அகழாய்வு என்பது அனைவரும் தெரிந்துகொள்ள வேண்டிய, புரிந்துகொள்ள வேண்டிய, தேவையான செயல்பாடே! அகழாய்வைத்

தொடர்வோம், தொன்மை வரலாற்றை மீட்போம் என்ற எனது தீர்ப்பினைக் கூறி, நல்ல வாய்ப்பைத் தந்த இலக்கிய மன்றத்திற்கு நன்றி பாராட்டி, பட்டிமன்றத்தை நிறைவு செய்கிறேன்.

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

வாழிய பாரத மணித்திருநாடு!

நன்றி, வணக்கம்.

## தற்காலத் தொல்லியல் ஆய்வுகள்

(உரையாடல்)

(பத்தாம் வகுப்பில் பயிலும் வளவனும் கபிலனும் பள்ளிக்குச் சென்றுகொண்டிருந்தனர்.)

வளவன் : கபிலா, இன்றைய நாளிதழில் செய்தி ஒன்றைப் படித்தாயா?

கபிலன் : காலையில் நாளிதழ் படிக்கவில்லை; சிறப்புச் செய்தி ஏதேனும் உண்டா?

வளவன் : ஆம். ஒரு கல்வெட்டைப் பற்றிய செய்தி இடம்பெற்றுள்ளது. அது, திருவண்ணாமலையில் கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டில் எழுதப்பெற்ற கல்வெட்டு. அக்கல்வெட்டுவரிகள், சங்ககால மன்னன் நன்னனையும், பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் பாடிய மலைபடுகடாம் நூலையும் குறிக்கின்றன. எத்துணை அரிய செய்தி இது, பார்த்தாயா!

‘நல்லிசைக் கடாம்புனை நன்னன் வெற்பில்

வெல்புக ழனைத்தும் மேம்படத் தங்கோன்

வாகையும் குரங்கும் விசைய முந்தீட்டிய

அடல்புனை நெடுவேல் ஆட்கொண்ட தேவன்‘

கபிலன் : வளவா, தொல்லியல் பற்றி எனக்கு ஏதும் தெரியாதே! அத்துறையில் உனக்குள்ள ஆர்வத்தைக் கண்டு வியக்கிறேன். தொல்லியல்பற்றி நீ அறிந்தனவற்றைச் சொல்; நானும் தெரிந்துகொள்கிறேன்.

வளவன் : நம் தமிழாசிரியர் இளங்கோ, இத்துறையில் ஆழ்ந்த ஈடுபாடுகொண்டவர். அவரிடம் சென்று, இதுபற்றிய விவரங்களை அறிந்துகொள்வோம்.

இருவரும் : வணக்கம், ஐயா!

தமிழாசிரியர் : வருக, வணக்கம்! இருவரும் இணைந்து வந்துள்ளீர்களே! என்ன செய்தி ?

கபிலன் : ஐயா! தொல்லியல் பற்றி நானும் வளவனும் கலந்துரையாடிக் கொண்டிருந்தோம். அதுபற்றிய தகவல்களைத் தங்களிடம் கேட்டு அறிந்துகொள்ள வந்துள்ளோம்.

தமிழாசிரியர் : மிக்க மகிழ்ச்சி. உங்கள் ஆர்வத்தைப் பாராட்டுகிறேன். இதுபற்றி எனக்குத் தெரிந்த தகவல்களைச் சொல்கிறேன்.

கபிலன் : ஐயா, தொல்லியல் என்றால் என்ன?

தமிழாசிரியர் : தொல்பழங்காலத்தைப்பற்றி ஆய்வு செய்தலையே தொல்லியல் அல்லது தொல்பொருளியல் என்கிறோம். தொன்மையான காலத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கைமுறை, தொழில்கள், வாணிகம், வேளாண்மை, அரசியல், நுண்கலைகள் முதலியவைபற்றி அவர்கள் விட்டுச்சென்ற எச்சங்களான கல்வெட்டுகள், கட்டடங்கள், காசுகள், செப்பேடுகள் முதலியவற்றின் அடிப்படையில் ஆய்ந்தறிதலே தொல்லியலின்முதன்மையான நோக்கம். தொல்லியலை ஆங்கிலத்தில் 'ஆர்க்கியாலஜி' எனக்குறிப்பிடுவர். தொல்லியல் ஆய்வு இன்றேல், மனிதன் கடந்துவந்த பாதையையும் அவனுடைய வரலாற்றையும் அறிய இயலாது.

வளவன் : ஐயா, தொன்மைக்காலம் என்பதற்கான காலவரையறை என்ன?

தமிழாசிரியர் : மனிதன் நாடோடியாக வாழ்ந்த காலத்திலிருந்து, வரலாற்றுக்கு முந்தைய காலம்வரை உள்ள காலத்தையே தொன்மைக்காலம் என்கிறோம்.

கபிலன் : தொன்மைக்கால நிகழ்வுகளை எவ்வாறு கண்டறிகிறார்கள், ஐயா?

தமிழாசிரியர் : அவ்வப்போது திட்டமிட்டுச் செய்யப்படும் ஆய்வுகளின்போதோ தற்செயலாகக் கிடைக்கும் தடயங்கள், எச்சங்களின் உதவியுடனோ தொன்மைக்கால நிகழ்வுகளைத் தொல்லியல் ஆய்வாளர்கள் கண்டறிகிறார்கள்.

வளவன் : எச்சங்கள், தடயங்கள் என்றால் என்ன ?

தமிழாசிரியர் : இக்கருத்தை உங்களுக்குப் புரியவைக்க ஓர் எடுத்துக்காட்டைக் கூறுகிறேன். மணிமேகலை, சிலப்பதிகாரம் முதலிய இலக்கியங்களில் இடம்பெற்றிருந்த காவிரிப்பூம்பட்டினம் ஒரு துறைமுக நகரம். அது சோழர்களின் கடற்கரை நகரம். இந்நகரம் இருந்ததற்கான ஆதாரங்கள் கிடைக்கவில்லை. இந்தியத் தொல்லியல் துறையினர் 1963ஆம் ஆண்டு

பூம்புகார் அருகில் உள்ள கீழார்வெளி என்னும் இடத்தில் மேற்கொண்ட கடல் அகழாய்வின்போது கி.மு. மூன்றாம் நூற்றாண்டைச் சார்ந்த கட்டட இடிபாடுகள் கண்டறியப்பட்டன. இந்த ஆய்வில் செங்கற்களால் கட்டப்பட்ட படகுத் துறை, அரைவட்டவடிவ நீர்த்தேக்கம், புத்தவிஹாரம் (புத்த பிக்குகள் தங்குமிடம்), வெண்கலத்தாலான புத்தர் பாதம் முதலிய எச்சங்கள் கிடைத்தன. இவை பண்டைய காவிரிப்பூம்பட்டின மக்கள் பயன்படுத்திய பொருள்கள் என்பதும் காவிரிப்பூம்பட்டினம் என்றொரு நகரம் இருந்தது என்பதும் வலுவான சான்றுகளுடன் மெய்ப்பிக்கப்பட்டுள்ளன. காவிரிப்பூம்பட்டினம் என்ற ஒரு நகரம் இருந்தது என்பதற்கு, அங்கே கிடைத்த தடயங்கள்தாம் காரணமாக இருந்தன என்பதனை நீங்கள்அறிந்துகொண்டிருப்பீர்கள் என எண்ணுகிறேன்.

கபிலன் : ஆமாம் ஐயா, தெளிவாகத் தெரிந்துகொண்டோம்.

தமிழாசிரியர் : நன்று. இப்போது உங்களின் அறிவுத்திறனுக்கோர் வினா. காவிரிப் பூம்பட்டினஅகழாய்வில் கண்டறிந்த தடயங்களிலிருந்து நீங்கள் என்னென்ன அறிந்துகொண்டீர்கள் ?

வளவன் : அங்குக் கிடைத்துள்ள புத்தர்சிலை, தூண் போன்றவற்றைக்கொண்டு, அங்கு வாழ்ந்த மக்களில் சிலர் புத்தசமயத்தைப் பின்பற்றியுள்ளனர் என்பதனை அறிய முடிகிறது, ஐயா.

தமிழாசிரியர் : அருமையாகச் சொன்னாய். கபிலா, வேறு என்னென்ன தகவல்களைப் பெறலாம்?

கபிலன் : படகுத்துறை கட்டப்பட்டுள்ளதனை நோக்கும்போது, அவ்வூர் மக்கள் கடல் வாணிகம் மேற்கொண்டுள்ளனர் என்பது தெளிவாகிறது, ஐயா!

தமிழாசிரியர் : மிக நன்று. தொல்லியல் ஆய்வில் இருவரும் தேறிவிட்டீர்கள். இவ்வாறு அகழாய்வில் கிடைக்கும் ஒவ்வொரு தடயத்திலிருந்தும் ஆய்வாளர் பல்வேறு வரலாற்று உண்மைகளை அறிந்துகொள்கின்றனர்.

வளவன் : ஐயா, அகழாய்வு என்பது பெரிய இயந்திரங்களைக்கொண்டு மண்ணைத் தோண்டி ஆய்வு செய்வதா?

தமிழாசிரியர் : (சிரித்துவிட்டு) அகழாய்வு என்பது இயந்திரங்களைக் கொண்டு மண்ணைத் தோண்டுவதன்று. அவ்வாறு செய்தால் தடயங்கள் சிதைந்துவிடும். பல உண்மைகளையும் நாம் இழந்துவிடுவோம். ஆகவே, ஆய்வுக்குழுவினர் ஆய்விடத்திலுள்ள மண்ணை மிக நுட்பமாகவும் பொறுமையுடனும் சிறுகச் சிறுகத் தோண்டிச் சிதையாமல் தடயங்களைத் திரட்டுவர்; அகழாய்வு செய்யும்போது பூமியின் மேற்பரப்பிலிருந்து கீழாகக் குறிப்பிட்ட ஒரு பகுதியினைச் சில வழிமுறைகளைப் பின்பற்றி அகழ்ந்து ஆய்வு செய்வர். இவ்வாறு செய்யுங்கால் பல்வேறு காலத்தில் வாழ்ந்த மக்கள் பயன்படுத்திய பொருள்கள் வெவ்வேறு மண்ணடுக்குகளில் கிடைப்பதுண்டு. இவற்றின் அடிப்படையில்தான் ஒரு நாகரிகத்தின் கூறுகளை அறிந்துகொள்ள இயலும். ஓரிடத்தில் எப்போதிருந்து மக்கள் வாழத் தொடங்கினர், எத்தகைய பண்பாட்டினைக் கொண்டு விளங்கினர் என்பன போன்ற வினாக்களுக்கு அகழாய்வின் மூலம் உரிய விடைகளைக் கூறஇயலும்.

வளவன் : மண்ணை நுட்பமாகத் தோண்டி ஆய்வு செய்வதுதான் அகழாய்வு இல்லையா, ஐயா?

தமிழாசிரியர் : சரியாகச் சொன்னாய் வளவா! அகழாய்வினைப் பூமியின் மேற்பரப்பினில் மட்டுமன்றிக் குகைகளினுள்ளும் நீருக்கடியிலும் செய்யலாம். நீருக்கடியில் அகழாய்வு செய்வதன்மூலம் இயற்கைச் சீற்றங்களினால் முற்காலத்தில் நீரினுள் மறைந்த நகரங்களையும் துறைமுகங்களையும் பற்றிய அரிய பல செய்திகளை வெளிக்கொணர இயலும்.

வளவன் : ஐயா, அகழாய்வு செய்யும் இடத்தை எந்த அடிப்படையில் முடிவு செய்கிறார்கள்? குறிப்பிட்ட ஓர் இடத்தில் தேவையான தடயங்கள் கிடைக்கும் என எவ்வாறு தீர்மானிக்கின்றனர்?

தமிழாசிரியர்: ஒரு நாட்டின் பழைமையான இலக்கியங்கள் அகழாய்விற்குரிய இடங்களைத் தெரிவுசெய்வதற்கு உறுதுணையாக இருக்கின்றன. அவற்றில் அக்காலத்தின் சிற்றூர்கள், நகரங்கள், துறைமுகங்கள், கோட்டைகள், அரண்மனைகள் முதலியவற்றைப் பற்றிய குறிப்புகள் பரவலாகக் காணப்படும். அவற்றின் துணைகொண்டு அகழாய்வு செய்வதற்கான இடங்களை முடிவு செய்கின்றனர்.

கபிலன் : ஐயா, தொல்லியல் என்னும் துறையைப்பற்றித் தோண்டத் தோண்டச் செய்திகள் வந்துகொண்டேயிருக்கின்றனவே.

தமிழாசிரியர் : ஆமாம், கபிலா! தொல்லியல் குறித்துச் சில செய்திகளை மட்டுமே நாம் பகிர்ந்து கொண்டுள்ளோம். அறிவியல் முன்னேற்றங்களால் தற்காலத்தில் தொல்லியல் ஆய்வுகளைப் பல்வேறு புதிய தொழில்நுட்பங்களின் உதவியுடன் செய்யும்போது மிகத்துல்லியமான முடிவுகளைப் பெறலாம். இதுபற்றி மேலும் பல தகவல்களை அறிந்துகொள்ள நூலகத்தினை நாடிச்சென்று தொல்லியல் தொடர்பான நூல்களைப் படித்து அறியலாம்.

இருவரும் : தொல்லியல் குறித்துப் பல செய்திகளைத் தங்களிடமிருந்து அறிந்து கொண்டதில் மிக்க மகிழ்ச்சி; நன்றி, ஐயா.

| |
|---|
| காசுகள்<br><br>தருமபுரி, கரூர், மதுரை ஆகிய மாவட்டங்களில், கி.மு.மூன்றாம் நூற்றாண்டு முதல் பல்வேறு காலக்கட்டங்களைச் சார்ந்த தங்கம், வெள்ளி, செம்பு, இரும்பு உலோகங்களினால் செய்யப்பட்ட காசுகள் கண்டறியப்பட்டுள்ளன. இவற்றின் ஒரு பக்கத்திலோ இரு பக்கங்களிலோ முத்திரைகள் பொறிக்கப்பட்டுள்ளன. இக்காசுகளில் சூரியன் மலைமுகடு, ஆறு, காளை, ஸ்வஸ்திகம், கும்பம் முதலிய சின்னங்கள் முத்திரைகளாகப் பொறிக்கப்பட்டுள்ளன. |
| பண்டைய காலத்தில் இறந்தோரை, அவர்கள் பயன்படுத்திய பொருள்களுடன் ஒரு தாழியிலிட்டுப் புதைக்கும் வழக்கம் இருந்தது. இவ்வகைத் தாழிகளையே |

முதுமக்கள் தாழிகள் என்கிறோம். தூத்துக்குடி மாவட்டம் ஆதிச்சநல்லூரில் 1876,2003 ஆகிய ஆண்டுகளில் நடத்தப்பட்ட அகழாய்வுகளில் ஏராளமான முதுமக்கள் தாழிகள் கண்டுபிடிக்கப்பட்டன. கி.மு.300 முதல் கி.பி. 300 வரையிலான காலக்கட்டத்தைச் சார்ந்த இத்தாழிகளில் இறந்தோரின் எலும்புகளுடன் தங்கத்தினாலான நெற்றிப் பட்டம், செம்பினாலான ஆண், பெண் தெய்வ உருவங்கள், மற்றும் இரும்பினாலான கத்திகள், விளக்குத் தாங்கிகள் முதலிய பொருள்களும் கிடைத்துள்ளன.

## சங்ககாலக் கல்வெட்டும் என் நினைவுகளும்

**- ஐராவதம் மகாதேவன்**

கரூரை அடுத்த புகளூரில் ஆறுநாட்டான் குன்றின் மீது பொறிக்கப்பட்டுள்ள சேரல் இரும்பொறை மன்னர்களின் கல்வெட்டுகளைக் கண்டறியும் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததும், அதை ஒட்டி உலகத் தமிழ்க் கருத்தரங்குகளில் தமிழ்ப் பிராம்மிக் கல்வெட்டுகளைப் பற்றி எழுந்த சுவையான விவாதங்கள், என் வாழ்நாளில் மறக்க முடியாத நிகழ்ச்சிகள் ஆகும். அவற்றுள் சில நினைவுகளை உங்களுடன் பகிர்ந்துகொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

1962ஆம் ஆண்டு முதல் ஐந்தாண்டு காலம் நான் கைத்தறித் துறை இயக்குநர் ஆகப் பணியாற்றி வந்தேன். தமிழகத்தில் மாவட்டத்திற்கு ஒரு நூற்பு ஆலை அமைக்கும் பொறுப்பையும் ஏற்றிருந்தேன். அதே நேரத்தில்தான் ஓய்வு கிடைக்கும்பொழுது மலைச் சாரல்களிலும் சிறு குன்றுகளிலும் காணப்படும் பிராம்மிக் கல்வெட்டுகளைச் சேகரிக்கும் சொந்த முயற்சியிலும் ஈடுபட்டிருந்தேன். எனக்கு அப்பொழுது இரண்டு ஆசைகள் இருந்தன. ஒன்று, பொருள் விளங்கவில்லை என்று அறிஞர்களால் அநேகமாகக் கைவிடப்பட்டிருந்த தமிழ்ப் பிராம்மிக் கல்வெட்டுகளைச் சரிவர வாசிக்கும் முறையைக் கண்டறிய வேண்டும்; மற்றொன்று, சங்ககாலத் தமிழ் மன்னர்களைப் பற்றிய எவ்விதமான புறச்சான்றுகளுமே தமிழகத்தில் கிடைக்கவில்லை என்ற குறை நீங்குமாறு அவர்களுடைய பெயர்களையோ மற்ற குறிப்புகளையோ இக்கல்வெட்டுகளில் காணவேண்டும் என்பனவாகும். இவ்விரு ஆசைகளும் நிறைவேறியது எனக்குக்

கிடைத்த பெரும்பேறுகள் என்றே கருதுகிறேன். தமிழ்நாட்டிலுள்ள பிராம்மிக் கல்வெட்டுகள் தமிழிலேயே எழுதப்பட்டவை என்றும் அவைகளைப் பொருள் சிறக்க வாசிக்க ஒரு முறை இருக்கிறது என்றும் நான் கண்டறிந்த ஆராய்ச்சிகளைப் பற்றி இங்குக் கூற இடமில்லை. சங்க காலத் தமிழ் மன்னர்கள் முதன்முதலாகத் தமிழகக் கல்வெட்டுகளில் தோன்றிய கதையை மட்டும் இங்குக் கூறலாம் என்று நினைக்கிறேன்.

இந்திய அரசின் தொல்பொருள் துறையினர் ஆண்டுதோறும் வெளியிட்டு வந்த தென்னிந்தியக் கல்வெட்டுகளைப் பற்றிய அறிக்கைகளில் 1927- 28 ஆம் ஆண்டுகளின் தொகுதியில் புகளூர்க் கல்வெட்டுகளைப் பற்றிய செய்திகள் முதன் முதலாகக் கிடைக்கின்றன. இவ்வறிக்கையில் ஆறுநாட்டான் குன்றின் மீதுள்ள குகைகளுள் ஒன்றில் நான்கு வரிகளில் எழுதப்பட்டுள்ள ஒரு பிராம்மிக் கல்வெட்டு இருப்பதாகவும், அது மிகவும் பழுதடைந்த நிலையில் இருப்பதால் அதைச் சரிவரப் படிக்க முடியவில்லை என்றும் அதில் ஆதன் என்ற சொல் காணப்படுவதால் அக்கல்வெட்டு சேர மன்னர்களைப் பற்றியதாக இருக்கலாம் என்றும் கூறப்படுகிறது. தமிழ்ப் பிராம்மிக் கல்வெட்டுகள் பெரும்பாலும் மிகச் சுருக்கமாக ஒரே வரியில் மூன்று அல்லது நான்கு சொற்களைக் கொண்டு மட்டுமே பொறிக்கப்பட்டவை. இந்நிலையில், நான்கு வரிகளாலான மிக நீளமான கல்வெட்டு அதிலும் சேர மன்னர்களைக் குறிக்கக் கூடிய ஒரு கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்ட பிறகும் நாற்பது ஆண்டுகளாக வாசிக்கப்படாமல் இருந்து வந்தது எனக்கு வருத்தமாக இருந்தது. என்றாவது ஒருநாள் நேரில் போய்ப் பார்த்து இக்கல்வெட்டைத் தீர ஆராய வேண்டும் என்று எண்ணியிருந்தேன்.

அந்த நாளும் 1965ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் தேதியன்று வந்தது. அன்று கரூருக்கு அருகில் கட்டப்பட்டு வந்த கூட்டுறவு நூற்பாலையைப் பார்வையிடச் சென்றிருந்தேன். என் வழக்கப்படி, கையுடன் அருகாமையிலுள்ள பழங்கல்வெட்டுகளைப் பற்றிய குறிப்புகளையும் எடுத்துச் சென்றிருந்தேன். அவற்றுள் ஒரு குறிப்பு மேற்கூறிய ஆறுநாட்டான் குன்றிலுள்ள கல்வெட்டுகளைப் பற்றியது ஆகும். நூற்பு ஆலையில் என்னுடைய அலுவல்களை முடித்துக்கொண்டு மாலை நேரத்தில் நானும் மற்றும் சில நண்பர்களுமாகக் காரில் ஆறுநாட்டான் குன்றின் அடிவாரம் வரை சென்றோம். அதற்குமுன் எங்களில்

எவரும் அச்சிற்றூருக்குப் போனது இல்லை; மலையின் மீது ஏற கிழக்குப் பக்கத்திலிருந்து படிக்கட்டுகள் இருப்பது கூட எங்களுக்கு அப்பொழுது தெரியாது. பெரும்பாலும் தமிழ்ப் பிராம்மிக் கல்வெட்டுகள் மனித சஞ்சாரம் அற்ற முள் புதர்கள் நிறைந்த குன்றுகளில்தான் இருக்கின்றன! அதே நினைவில் எவரையும் வழி கேட்காது குன்றின் தென்புறம் இருக்கும் ஒரு கரடுமுரடான சரிவின் வழியாக வியர்க்க விறுவிறுக்க, குன்றின் மீது ஏறி உச்சியின் தெற்குச் சாரலை அடைந்தோம். மேலைக் கோடியில் தென்முகமாக இருந்த குகையின் உயரமான வாயிலுக்கு மேலாக வெட்டப்பட்டிருந்த பிராம்மிக் கல்வெட்டு மஞ்சள் நிறமான மாலை வெய்யிலில் பளிச்சென்று தெரிந்தது. கல்வெட்டு மிகவும் தேய்ந்துபோய் அங்கொன்றும் இங்கொன்றும் ஆகச் சில எழுத்துகள் மட்டும்தான் தெரியும் என்று எதிர்பார்த்து ஏமாற்றம் அடையத் தயாராகத்தான் வந்திருந்தேன். ஆனால் நான் கண்டது வேறு; மிகப்பெரிய எழுத்துகளில் நான்கு நீண்ட வரிகளில் தெளிவாகப் பொறிக்கபட்டிருந்தது அக்கல்வெட்டு. முதலிலும் முடிவிலும் ஓரிரு எழுத்துகள் நீங்கலாக ஏனைய எழுத்துகளைப் படிப்பதும் எனக்குக் கடினமாகவே இல்லை. இந்தக் கல்வெட்டையா நாற்பது ஆண்டுகளாகப் படிக்க முடியவில்லை என்று விட்டுவிட்டார்கள் என்ற வியப்பு அன்று மேலோங்கியது; இன்றும் தணியவில்லை.

கையுடன் எடுத்து வந்திருந்த நோட்டுப் புத்தகத்தைப் பிரித்து, கல்வெட்டை எழுத்துக் கூட்டி வாசித்த வண்ணம் படியெடுக்கலானேன். முதல் வரியில் புதுமை எதுவும் இல்லை: யாற்றூர் என்னும் இடத்தைச் சேர்ந்த சமணத் துறவியான செங்காயபன் வசிக்கும் உறையுள் இது என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இது பெரும்பாலும் ஏனைய தமிழ்ப் பிராம்மிக் கல்வெட்டுகள் தரும் செய்திகள் போலவே இருந்தது. அடுத்த வரிக்குப் போனேன்: இரண்டாவது வரியில் கோ என்ற முதல் சொல்லைக் கண்டவுடன் உள்ளம் மகிழ்ச்சியால் துள்ளியது; சங்க காலத் தமிழ் மன்னரின் கல்வெட்டுகள் இது என்பது உறுதியானது. மேலும் படித்தேன் இரண்டாம் வரியை.

'கோ ஆதன் செல்லிரும் பொறை மகன்' என்ற சொற்களைப் படித்தவுடன் எனக்கு ஏற்பட்ட வியப்பையும் மகிழ்ச்சியையும் சொல்லி மாளாது! ஆனாலும் தமிழிலும் வரலாற்றுத் துறையிலும் ஈடுபாடு உள்ள அன்பர்களுக்கு எனக்கு ஏற்பட்ட உணர்ச்சி வெள்ளத்தை விளக்க அவசியம் இல்லை என்றே நினைக்கிறேன். அடுத்தடுத்து 'பெருங்கடுங்கோன்', 'இளங்கடுங்கோ', இளங்கோ என்ற

பெயர்களைப் படித்தபொழுது என் கண்களையே என்னால் நம்ப முடியவில்லை. சங்க நூல்களில் மட்டும் இதுவரை காணப்பட்ட பண்டைய தமிழ் மன்னர்களின் பெயர்களைத் தமிழகத்தில் முதல்முறையாக ஒரு கல்வெட்டில் கண்டுவிட்ட ஆனந்தத்தில் நோட்டுப் புத்தகத்தைத் தலைக்கு மேல் தூக்கிப் பிடித்துக்கொண்டு கூத்தாடினேன். என்னுடன் வந்தவர்கள், என்னை ஒரு மாதிரியாக பார்த்தார்கள்!

என்னை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்திய அக்கல்வெட்டின் முழு வாசகம் பின்வருமாறு:

“..அம்மண்ணன் யாற்றூர் செங்காயபன் உறைய்

கோ ஆதன் செல்லிரும் பொறை மகன்

பெருங் கடுங்கோன் மகன் (இ) ளங்

கடுங்கோ (இ) ளங்கோ ஆக அறுத்த கல்”

இது கருவூரிலிருந்து ஆட்சி செய்த சேரல் இரும்பொறை மன்னர்கள் பொறித்தது. பதிற்றுப்பத்திலும் ஏனைய சில சங்க நூல்களிலும் பாடப்பெற்ற பழந்தமிழ் மன்னர்கள் இவர்கள். இக்கல்வெட்டு ஏறத்தாழ கி.பி. (பொ.ஆ.) இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்தது. இச்செய்திகள் மட்டும் எனக்கு அப்பொழுதே விளக்கமாகத் தெரிந்தன. அதற்குள் இருட்டிவிட்டதால் மற்ற கல்வெட்டுகளை இன்னொரு முறை பார்த்துக் கொள்ளலாம் என்று (கீழ்ப்புறம் இருந்த படிக்கட்டுகள் வழியாக!) இறங்கிக் கரூருக்குத் திரும்பினோம்.

நான் சென்னை வந்த அன்றே வரலாற்றுப் பேராசிரியர் திரு. நீலகண்ட சாஸ்திரி அவர்களின் வீட்டுக்குச் சென்று நான் எடுத்துவந்த கல்வெட்டுப் படியைக் காட்டினேன். அவர் அப்பொழுது என்னிடம் கேட்ட கேள்வி இன்றும் நினைவில் இருக்கிறது. ‘கையால்தானே எழுதியிருக்கிறீர்கள்; ஒழுங்காகப் படியெடுத்தீர்களா?‘ என்று கேட்டார்! ஆராய்ச்சி முறைகளில் அவருக்கு இருந்த அழுத்தத்தையும் உண்மைப்பற்றையும் படிப்பினைகளாகக் கொண்டேன் அன்று. அதற்கு அடுத்த சில நாட்களிலேயே கரூரிலிருந்த நண்பர்களின் உதவியால் அந்தக் குகை வாயிலில் மூங்கிலால் சாரம் கட்டி அதன் மீது ஏறி நின்று பாறையின் மீது மெல்லிய தாட்களைப் பரப்பிக் கல்வெட்டை எழுத்தெழுத்தாகக் கவனமாகப் படியெக்க ஏற்பாடு செய்தேன். அதற்குப் பிறகு ஒவ்வொரு முறையும் கரூருக்குச் செல்லும்

பொழுதெல்லாம் புகளூருக்கும் 'தலயாத்திரை' சென்று ஆறுநாட்டான் குன்றிலிருந்த எல்லா பிராம்மிக் கல்வெட்டுகளையும் ஒன்றொன்றாகப் படியெடுத்து முடித்தேன். அதே ஆண்டு மார்ச் மாதம் ஹிந்து தினத் தாளில் புகளூர்க் கல்வெட்டுகளைப் பற்றி ஒரு சிறு குறிப்பையும் வெளியிட்டேன்.

பிறகு ஒரு நாள் என் ஆராய்ச்சிக் குறிப்புகளை எடுத்துக்கொண்டு கோவையில் அப்பொழுது வசித்து வந்த திரு.கே.வி. சுப்பிரமணியனார் அவர்களைக் காணச் சென்றேன். அவர்தான் தமிழ்நாட்டிலுள்ள பிராம்மிக் கல்வெட்டுகளின் ஆராய்ச்சிக்கு அடிகோலியவர். இக்கல்வெட்டுகளில் தமிழுக்கே உரிய எழுத்துக்களான ழ, ள, ற, ன ஆகியவை வருவதை முதன் முதலாகச் சுட்டிக்காட்டி இக்கல்வெட்டுகள் பிராகிருத மொழியில் ஆனவை என்ற தவறான கருத்தை மறுத்து, இவை தமிழில்தான் எழுதப்பட்டவை என்று நிறுவிய சீரிய ஆராய்ச்சியாளர் கே.வி. சுப்பிரமணியனார். வயது மிகவும் முதிர்ந்து, உடல் தளர்ந்து, கண் பார்வை சரியாக இல்லாத நிலையிலும் புகளூர்க் கல்வெட்டைப் பற்றிய செய்திகளைத் தினத் தாள்களில் படிக்கக் கேட்டுத் தெரிந்து வைத்துக்கொண்டிருந்தார் அவர். நான் அவர் முன் அமர்ந்தவுடன், 'சேரல் இரும்பொறை மன்னர்களின் கல்வெட்டைப் பற்றி எழுதியவர் நீங்கள்தானா?' என்று கேட்டார். நான் 'ஆம் என்றவுடன் தன் கை விரல்களால் என் முகத்தைத் தடவிப் பார்த்தார்; அப்பொழுது அவருடைய கண்களிலிருந்து கண்ணீர் பெருகியது; 'நீங்கள் கொடுத்து வைத்தவர்!' என்று ஆசி கூறினார். அப்பெரியவரின் கல்விப் பற்றையும் தூய உள்ளத்தையும் அன்பையும் நினைத்து நினைத்து என் உள்ளம் நெகிழ்கிறது.

**நூல்வெளி**

ஐராவதம் மகாதேவன் எழுதிய இக்கட்டுரை 'கல்வெட்டு' இதழில் வெளிவந்தது. இவர் இந்திய ஆட்சிப்பணி அலுவலராக இருந்து, தொல்லியலிலும் எழுத்தியலிலும் கொண்ட ஆர்வத்தால் விருப்ப ஓய்வு பெற்றார். தனக்கு மிகவும் விருப்பமான கல்வெட்டு ஆய்வில் 30 ஆண்டுகள் ஈடுபட்டார். சிந்துவெளி எழுத்துருவை ஆய்ந்து திராவிட எழுத்து என்று அவர் கண்ட முடிவு, வரலாற்றில் திருப்பத்தை ஏற்படுத்தியது. அவருடைய ஆய்வுகள் ஐந்திற்கும் மேற்பட்ட நூல்களாகவும் கட்டுரைகளாகவும் வெளிப்பட்டுள்ளன. ஆய்வுக்காக ஜவகர்லால் நேரு

ஆய்வறிஞர் விருது (1970), இந்திய வரலாற்று ஆராய்ச்சி மைய விருது (1992), தாமரைத்திரு விருது (2009) ஆகிய விருதுகளைப் பெற்றுள்ளார். பதிற்றுப்பத்தில் இடம்பெற்ற சேர அரசர்களின் பெயர்கள் புகளூர்க் கல்வெட்டில் இடம்பெற்றுள்ளதை இவர் கண்டுபிடித்தது, இலக்கியத்தையும் கல்வெட்டாய்வையும் ஒருங்கிணைத்தது. பாறைகளிலிருந்த பழங்கல்வெட்டுகளைப் படியெடுத்து ஆய்வு நூலாக்கி இவர் தந்தது, இமயப் பணி.

| |
|---|
| தென்தமிழ் நாட்டில் உள்ள குகைகளில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுகளில் 'பிராம்மி' வரிவடிவத்துடன் தமிழி, தரமிழி, திராவிடி என்று அழைக்கப்படுகிற வேறுபட்ட வரிவடிவங்களும் இருப்பதை ஆய்வுகளின் மூலம் கண்டறியப்பட்டது. தமிழகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட சங்ககாலக் கல்வெட்டுகள், இலக்கியத் தரவுகள் ஆகியவற்றில் அசோகர் காலத்திய பிராம்மி வரிவடிவத்திலிருந்து முரண்பாடுகள் தெரியவருகின்றன. இவற்றை இக்கல்வெட்டுகளை ஆராய்ந்த ஐராவதம் மகாதேவன் - தன்னுடைய ஆய்வு நூலான எர்லி தமிழ் எபிகிராபி' யில் தெளிவுபடுத்துகிறார்.<br>தமிழ் மொழியை எழுதப் பயன்படுத்தப்பட்ட பழந்தமிழ் வரிவடிவத்தைத் தமிழ்ப் பிராம்மி என்றழைக்காமல் 'தமிழி' என்றோ அல்லது பழந்தமிழ் : என்றோ அழைக்கவேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கிறார். |
| புகளூர்க் கல்வெட்டில் காணப்படும் மூன்று தலைமுறை மன்னர்கள் முறையே பதிற்றுப்பத்தின் 6ஆவது 7ஆவது 8ஆவது பாட்டுடைத் தலைவர்கள் என்று ஐராவதம் மகாதேவன் எழுதியிருந்தார். E இதை மறுத்து இம்மன்னர்கள் முறையே 7ஆவது 8ஆவது 9ஆவது பாட்டுடைத் தலைவர்கள் என்று விளக்கியிருந்தார் மாணவர் ஒருவர். அதைச் சரியென்று உணர்ந்த மகாதேவன் முதல் உலகத்தமிழ் மாநாட்டில் அறிஞர்கள் முன்னிலையில் அதைக்குறிப்பிட்டு அக்கருத்தை ஏற்றுக்கொள்வதாகக் கூறினார். ஆய்வில் உண்மையை ஏற்றுக்கொள்வது தவற்றைத் திருத்திக்கொள்வது என்னும் உயரிய நெறி அவரிடம் இருந்தது. |
| '1965 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 3 ஆம் தேதியன்று மதுரைக்கு அருகில் உள்ள மாங்குளம் குகைக் கல்வெட்டுகள் (இயல் - 1 முகப்புப் படம்) சங்ககாலப் பாண்டிய |

மன்னாகிய நெடுஞ்செழியனுடையவை என்றும் அவை கி.மு. (பொ. ஆ.) 2ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை என்றும் கண்டுபிடித்தேன்'.

– ஐராவதம் மகாதேவன்

நூற்றாண்டு மாணிக்கம், பக்:109

**கல்வெட்டுகள்**

**– தி.வை. சதாசிவப் பண்டாரத்தார்**

வடவேங்கடம் தென் குமரிக்கு இடைப்பட்ட நம் தமிழகமானது பெரியனவும் சிறியனவும் ஆகிய திருக்கோயில்கள் பலவற்றைத் தன்னகத்துக் கொண்டு விளங்குவதை யாவரும் அறிவர். நம் நாட்டில் அத்துணைக் கோயில்கள் இருப்பதற்குக் காரணம், பண்டைத் தமிழ் வேந்தர்களும், குறுநில மன்னர்களும் அரசாங்கப்பணி புரிந்த அரசியல் தலைவர்களும், சமயப்பற்றுடையவர்களாய்த் திகழ்ந்த தமிழ் நாட்டுச் செல்வர்களும், பிற – அன்பர்களும் தமக்குத் தொடர்புடைய நகரங்களிலும் ஊர்களிலும் தம் வழிபடு கடவுளர்க்குத் திருக்கோயில்கள் அமைத்து விழா நிகழ்த்தத்தொடங்கியமையே யாகும். அக்கோயில்கள் எல்லாம் நம் முன்னோருடைய சமயப் பற்றையும் பெருமையையும் நம்பினோர்க்கு அறிவுறுத்தும் நினைவுச் சின்னங்களாகவும், வானளாவ உயர்ந்து காண்போர் கண்களைக் கவரும் பெருமித முடையனவாகவும் இக்காலத்தும் நின்று நிலவுதல் காணலாம்.

கோயில்களின் உள்ளே சென்று, கருப்ப இல்லில் எழுந்தருளியுள்ள இறைவனை வணங்கி, அக்கருப்ப இல்லைச் சூழ்ந்துள்ள பிரகாரத்தைச் சுற்றிவரும்போது கருங்கற் சுவர்களின் மேல் வரிசை வரிசையாக எழுத்துககள் வரையப்பட்டிருத்தலைப் பார்க்கலாம். அவ்வெழுத்துகள் சிற்றுளி கொண்டு கல்தச்சர்களால் பொறிக்கப்ட்டனவாகும். அவைகளே கல்வெட்டுகள் எனவும் சிலாசாசனங்கள் எனவும் கூறப்படுகின்றன. அவற்றைப் பார்த்தவர்கள் எழுத்துகள் தமக்கு விளங்காமையால், அவைகளெல்லாம் தேவர்கள் தம் தெய்வ மொழியில் முற்காலத்தில் வரைந்து வைத்தவையாதல் வேண்டும் என்றுசொல்லி வந்தனர்.

அத்தகைய நிலையில் நாம்இருந்த காலத்தில் அக்கல்வெட்டுகள் நம் தாய்மொழியாகிய தமிழில் எழுதப்பெற்றவைகளே என்பதை நன்குணர்ந்து நமக்கு அறிவுறுத்தியவர்கள் மேல் நாட்டுப் பேரறிஞர்களேயாவர். அவர்களுள் ராபர்ட்சிவெல்,டாக்டர்கீலஹார்ன்.டாக்டர்பர்னல்,டாக்டர்பூலர், டாக்டர் ஷீல்ட்ஷ் முதலானோர் குறிப்பிடத்தக்கவர் ஆவர். அவர்களுடைய ஊக்கமும், உழைப்பும் இல்லையேல் அவைகள் காலப்போக்கில் அழிந்து பயன்படாமல் போயிருக்கும் என்பது திண்ணம். இந்திய அரசாங்கத்தினரும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கல்வெட்டிலாகாவும் புதைபொருள் ஆராய்ச்சி இலாகாவும் நிறுவித் தக்க அறிஞர்களைக் கொண்டு கோயிகளிலுள்ள கல்வெட்டுகளைப் படி எடுப்பித்தும், புதைபொருள் ஆராய்ச்சி செய்வித்தும் அவற்றால் அறியக் கிடக்கும் பழைய வரலாறுகளை ஆராய்ந்து வெளியிடுமாறு செய்தனர். அவற்றின் பயனாகப் பல நூற்றாண்டுகளாக நாம் அறிந்து கொள்ள முடியாத நிலையில் மறைந்து கிடந்த நம் தமிழக வரலாறு சிறிது சிறிதாக வெளிவரத் தொடங்கியது. அன்னியர் ஆட்சியினால் நம் நாட்டில் பல தீமைகள் ஏற்பட்டவை உண்மையெனினும், அதனால் சில நன்மைகளும் கிடைத்துள்ளமையை நாம் எளிதில் மறந்துவிடமுடியாது. அத்தகைய நன்மைகளுள் நமது பழைய வரலாற்றை நாம் அறிந்து கொள்ளுமாறு அரசாங்கத்தினர் கல்வெட்டிலாகா மூலம் செய்து வந்த அருஞ்செயல்கள் நம்மனோரால் பெரிதும் பாராட்டற்குரியனவாகும்.

இனி, கல்வெட்டுகள் நம் நாட்டில் முதலில் எங்ஙனம் தோன்றின என்பதை ஆராய்ந்து காண்போம். பகைவர் முன்னின்று ஆற்றலோடு போர்புரிந்து உயிர் துறந்த வீரர்களை நினைவு கூர்தற் பொருட்டு அவர்கள் இறந்த இடங்களிலாதல் அல்லதுவேறு தொடர்புடைய இடங்களிலாதல் நடுகல் ஒன்றமைத்து விழா நடத்திப் பாராட்டுதல், முற்காலத்தில் தமிழ் மக்கள் கைக் கொண்டிருந்த ஒரு பழைய வழக்கமாகும். இவ்வுண்மையைப் பழைய தமிழ் நூலாகிய தொல்காப்பியத்திலுள்ள,

காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்

சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை வாழ்த்தலென்

றிருமூன்று வரையிற் கல்லொடு புணர

**வெட்சித்திணை – 5**

என்னும் சூத்திரப்பகுதியினால் நன்குணரலாம். அந்நடுக்கல்லின் மேல் போர்க்களத்தில் இறந்த வீரனின் பெயரும் பெருமையும் வரையப்படும் வழக்கம் பண்டைக் காலத்தில் இருந்தது என்பது கடைச்சங்கப் புலவர்களின் பாடல்களால் புலப்படுகின்றது. அதனை,

"நல்லமர்க் கடந்த நாணுடை மறவர்

பெயரும் பீடும் எழுதி யதர்தொறும்

பீலி சூட்டிய பிறங்கு நிலை நடுகல்"

– என்னும் அகநானூற்றுப் பாடலும்,

"அணிமயிற் பீலி சூட்டிப் பெயர் பொறித்

தினிநட் டனரே கல்லும்"

- என்னும் புறநானூற்றுப் பாடலும்;

"நல்வழிக் கொடுத்த நாணுடை மறவர்

செல்லா நல்லிசைப் பெயரொடு நட்ட

நல்லேசு கவலை யெண்ணுமிகப் பலவே.' - வரிகள் 387 – 389

என்னும் மலைபடுகடாம் அடிகளும் தெள்ளிதின் உணர்த்துதல் காணலாம், அந்நூல்களை நுணுகி ஆராயுமிடத்துப் பகைவர் முன்னின்று அஞ்சாமல் போர்புரிந்து புகழுடன் இறந்த வீரர்களின் நடுகற்களின் மேல் பொறிக்கப்பட்ட அவர்களுடைய பெயரும் பீடுமே நம் நாட்டில் முதலில் தோன்றிய தமிழ்க் கல்வெட்டுகள் என்பது ஐயமின்றித் துணியப்படும்.

கி.பி. ஏழாம் நூற்றாண்டின் இறுதியிலும் எட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் நிலவிய பேரரசரும் சைவசமயக் குரவராகிய சுந்தரமூர்த்திகளின் அரிய நண்பரும் ஆகிய சேரமான் பெருமாள் நாயனார் தாம் இயற்றியுள்ள திருவாரூர் மும்மணிக் கோவையில்,

பட்டோர் பெயரும் ஆற்றலும் எழுதி

நட்ட கல்லும் மூதூர் நத்தமும்

**திருவாரூர் மும்மணி – 16**

என்று கூறியிருத்தலால் கடைச்சங்கநாளிலிருந்த அவ்வழக்கம் அச்சங்ககாலத்திற்குப் பின்னரும் தொடர்ந்து வந்துள்ளது என்பது நன்கு புலனாகிறது. அக்காலப் பகுதியில் நம் தமிழ்நாட்டில் சமண முனிவர்கள் தங்கி ஆங்காங்குச் சங்கங்கள் அமைத்துத் தம் சமயத்தையாண்டும் பரப்பி வந்த செய்தி வரலாற்றறிஞர் பலரும் அறிந்ததொன்றாம். அம்முனிவர்கள் உண்ணா நோன்பியற்றி உயிர்நீத்த இடங்களில் அவர்கள் பால் அன்பு பூண்டொழுகிய அரசியல் தலைவர்களும் மாணவர்களும் அன்னாரின் பெயர்களையும் அருஞ்செயல்களையும் பொறித்து வைத்திருக்கின்றனர். அத்தகைய கல்வெட்டுகளை மலைப்பாறைகளிலும் குன்றுகளிலும் குகைகளிலும் பார்க்கலாம். செஞ்சிக்கடுத்த திருநாதர் குன்றிலும் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஆனை மலையிலும் திருச்சிராப்பள்ளிக் குன்றிலும் அக்கல்வெட்டுகள் இக்காலத்தும் காணப்படுகின்றன. எனவே, நம் தமிழகத்தில் பண்டைய நாள்களில் அருஞ்செயல்புரிந்து இறந்த பட்ட போர் வீரர்களின் பெயரையும் ஆற்றலையும் உணர்த்தும் முறையில் நடுகற்களின் மேல் முதலில் தோன்றிய தமிழ்க்கல்வெட்டுகள், பிறகு சமணமுனிவர்களின் சமாதிகளிலும் கருங்கற்படுக்கைகளிலும் பொறிக்கப்பட்டு, அதன் பின்னர் அரசர்களும் பிறரும், எடுப்பித்த கருங்கற்கோயில்கள் பலவற்றிலும் வரையப்பட்டன என்பது தெள்ளியது. இனி கோயில்களில் கல்வெட்டுகளைப் பொறிக்கத் தொடங்கியமைக்கு காரணம் யாது என்பதை ஆராய்வோம்.

கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு முடிய நம் தமிழ் நாட்டில் ஆட்சி புரிந்த பல்லவ அரசர்கள் முதலில் கருங்கற் கோயில்கள் அமைத்தனர். அவர்களுக்குப் பிறகு, அரசாண்ட சோழ மன்னர்கள் சைவ சமயத்தில் பெரிதும் ஈடுபாடுடையவர்களாயிருந்தமையால் தமிழகத்தில் யாண்டும் கருங்கற் கோயில்கள் எடுப்பித்துப் பெரும் புகழ் எய்தினார்கள். அங்ஙனம் பாண்டிவேந்தர்களும் தம் ஆட்சிக்குட்பட்டிருந்த நாடுகளில் கருங்கற் கோயில்கள் பலவற்றை அமைத்தார்கள். பேரரசர்களின் செயலைப் பின்பற்றிக் குறுநில மன்னர்களும் அரசியல் தலைவர்களும் தமக்குத் தொடர்புடைய ஊர்களில் பல கோயில்கள் கட்டினார்கள். அக்கோயில்கள் எல்லாவற்றிலும் நாள் வழிபாடும்

திங்கள் விழாக்களும் ஆண்டு விழாக்களும் சிறப்பாக நடைபெற்றுவரும்பொருட்டு அவற்றை எடுப்பித்த பெரு வேந்தர்களும் சிற்றரசர்களும் பெரும் பொருளும் நிலங்களும் வழங்கினர். அவர்களைப் போல் சமயப்பற்றுடைய பிற அன்பர்களும் கோயில்களுக்கு நிவந்தங்கள் அளித்துப் பலவகைப்பட்ட அறங்கள் புரிய முன் வந்தனர். அவர்கள் எல்லோரும் தாம்கோயில்களுக்கு நிவந்தமாக அளித்தவற்றை விளக்கமாக அவ்வக் கோவில்களின் கருங்கற் சுவர்களில் வரைந்து வைப்பாராயினர். சில சமயங்களில் அவற்றின் படியொன்றைச் செப்பேடுகளில் பொறித்து உரிய கோயிலுக்குக் கொடுப்பதும் உண்டு. அவர்கள் அவ்வாறு செய்து வந்தமைக்குக் காரணம் அவ்வறங்கள் இடையில் நின்றுபோகாமல் எக்காலத்திலும் நன்கு நடைபெற்று வருதல் வேண்டும் என்ற ஆர்வமேயாம். அன்றியும் அவை கோயில்களுக்குரிய தக்க ஆதாரமாக அமைந்து என்றும் பயன்பட வேண்டும் என்பதுமாம்.

கோயில்களுக்கு விடப்பட்டுள்ள நிவந்தங்களைப் பலரும் உணர்ந்து அங்கு நடைபெற வேண்டிய நாள் வழிபாடு, திங்கள் விழா, ஆண்டு விழா முதலான எல்லாம் முறைப்படி தவறாமல் நிறைவேறி வருகின்றனவா என்று ஆராய்வதற்குப் பயன்படுமாறு பொது மக்கள் எல்லாரும் பார்க்கக் கூடிய புறச் சுவர்களின் மேல் கல்வெட்டுகள் வரையப்பட்டுள்ளமை அறியத்தக்கதாகும். அக்காலத்தில் கோயில்களுக்குத் திருப்பணிபுரிய விரும்பும் விரும்பும் அன்பர்கள் முதலில் அரசாங்கத்தினரிடம் உத்தரவு பெற்று, அக்கோயில்களிலுள்ள கல்வெட்டுகள் எல்லாவற்றையும் படி எடுத்து வைத்துக்கொண்டு, திருப்பணி முடிவெய்திய பின்னர், அரசியல் அதிகாரிகள் பார்த்துக் குறிப்பிட்ட இடங்களில் அவற்றை மீண்டும் எழுதுவித்தல் வேண்டும். இது பண்டைத் தமிழ் வேந்தர்களது ஆணையாகும். இதனால், கல்வெட்டுகள் கோயில்களுக்கு எத்துணை இன்றியமையா ஆதாரங்களாக அரசர்களால் கருதப்பட்டு அந்நாளில் பாதுகாக்கப்பட்டு வந்தன என்பது தெள்ளிதிற் புலனாதல் காண்க.

இனி, கோயில்களில் நாள்தோறும் நிகழ்தற்குரிய வழிபாடுகளும், விழாக் காலங்களில் நடைபெற வேண்டிய சிறப்பு நிகழ்ச்சிகளும், பகலும், இரவும் இடையீடின்றி எரிக்கப்படும் நந்தாவிளக்குகளும், அங்குப் பணிபுரியும் தேவகன்மிகளின் கடமைகளும், அங்குள்ள அணிகலன்கள், வெள்ளிக் கலங்கள்,

செப்புக்கலங்கள் முதலியவற்றின் பெயர்களும் அவற்றின் எடைகளும், கோயில், கோபுரம், மண்டபம் திருச்சுற்று மாளிகைபடிமம் முதலியவற்றின் பெயர்களும், அவற்றினை அமைத்தோர் பெயர்களும் கல்வெட்டுகளில் விளக்கமாகக் குறிக்கப்பட்டிருத்தல் காணலாம்.

இங்ஙனம் கோயில்களுக்குத் தொடர்புடைய செய்திகள் பலவற்றை யுணர்த்தும் கல்வெட்டுகளேயல்லாமல் வேறு செய்திகளைக் கூறும் கல்வெட்டுகளும் கோயில்களில் பொறிக்கப்பட்டுள்ளன. அவற்றில் அரசர்கள் ஊர்ச் சபைகளுக்கும் கோயில்களுக்கும் அனுப்பிய திருமுகங்களும் அரசாங்க அறிக்கைகளும், குறுநில மன்னர்கள் தமக்குள் செய்து கொண்ட உடன்படிக்கைகளும், அரசர்கள் பொது மக்களுள் சில வகுப்பினருக்கு வழங்கிய உரிமைப் பத்திரங்களும், கிராம சபைகள் அமைத்தற்குரியவிதிகளும், அதில் உறுப்பினராதற்குரியவர்களின் தகுதியும் அன்னோரின் கடமையும், அச்சபையார் செய்த சில குறிப்பிடத்தக்க முடிபுகளும், அரசர்கள் அரசியல் அதிகாரிகள் முதலானோரின் வீரச் செயல்களையுணர்த்தும் பாடல்களும், அரசியல் தலைவர்களுக்கும் புலவர்களுக்கும் மருத்துவர்கட்கும் கல்லூரி கட்கும் நூல் நிலையங்கட்கும் அரசர்களும் பிறரும் வழங்கிய இறையிலி நிலங்களும் வரையப்பட்டிருக்கின்றன. அவற்றால் பண்டைத் தமிழ் வேந்தர்களின் அரசியல் முறைகளும், கிராம ஆட்சியும் சமுதாய வாழ்க்கையும், சமய நிலையும் நாகரிகமும், கல்வி, கைத்தொழில், வாணிகம் முதலியனவும் அந்நாளில் எவ்வாறு இருந்தன என்பதை நன்கறியலாம்.

பொதுவாகக் கல்வெட்டுகளை நோக்கின் முதலில் ஸ்வஸ்திஸ்ரீ என்ற மங்கல வாசகமும், பிறகு அக்கல் வெட்டுத் தோன்றிய காலக்குறிப்பும், பின்னர் கல்வெட்டுச் செய்திகளும், அதன் பின்னர் அதற்குத் தொடர்புடையவர்களின் கையெழுத்துகளும், இறுதியில் இது பன்மாகேஸ்வர ரகைக்ஷக்ஷ ; இது ஸ்ரீ வைஷ்ணவரகைக்ஷ; இவ்வறங்காத்தார் திருவடி என் தலை மேலன; அறமறவற்க; - அறமல்லது துணையில்லை; என்ற ஓம்படைக்கிளவிகள் ஒன்றாயினும் சிலவாயினும் காணப்படும். சில கல்வெட்டுகளில் ஓம்படைக்கிளவியோடு அவ்வறத்தைச் சிதைத்தார் அச் செயலால் அடையும் பழி பாவங்களும் சேர்த்து வரையப்பட்டுள்ளன. அவை 'இது இறக்குவான் கங்கையிடை குமரியிடை எழுநூற்றுக்காதமும் செய்தார் செய்த பாவமும் எய்துவான் இதற்குத் தீங்கு

வேண்டுவான் வழி அறுக; இது விலக்குவான் கங்கையிடை குமரியிடை ஏழு நூற்றுக்காதமும் செய்தார் செய்த பாவமும் எய்துவான் இதற்குத் தீங்கு வேண்டுவான் வழி அறுக; இது விலக்குவான், கங்கையிடை குமரியிடை குராற் பசு கொன்றான் செய்த பாவங் கொள்வான் என்பனவும் பிறவுமாம்.

கல்வெட்டுகளில் காணப்படும் காலக்குறிப்புகள் எல்லாம் அந்நாட்டு வேந்தரது ஆட்சியாண்டேயாகும். சில கல்வெட்டுகளில் அரசனது ஆட்சியாண்டோடு சகாப்தமும் கலியப்தமும் கொல்லம் ஆண்டும் குறிக்கப்பட்டுள்ளன. அரசனது ஆட்சியாண்டிற்கு முன் அவனுடைய வீரச்செயலும் சிறப்புப் பெயரும் இயற் பெயரும் பொறிக்கப்படுவது பழைய வழக்கம். அதோடு இல்லாமல் மெய்க் கீர்த்தி அமைத்து ஆட்சியாண்டு வரும் முறை, முதல் இராசராசசோழனால் கி.பி 893-ம் ஆண்டில் முதலில் தொடங்கப்பட்டது. அவனைப் பின்பற்றி மற்ற அரசர்களும் மெய்கீர்த்தி அமைத்துக் கல்வெட்டுகள் வரையத் தொடங்கினர். அரசனுடைய ஆட்சியாண்டு ஏறஏற மெய்க்கீர்த்தியும் புதிய புதிய செய்திகளோடு வளர்ந்து கொண்டே போகும். அதன் துணைக் கொண்டு ஒவ்வொருவேந்தருடைய ஆட்சியிலும் எவ்வெவ்வாண்டில் எந்த எந்த நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன என்பதை ஆராய்ந்து அறிந்து கொள்ளலாம். ஆகவே மெய்க்கீர்த்திகளோடு அமைந்த கல்வெட்டுகள் எல்லாம் வரலாற்று ஆராய்ச்சிக்கு சிறந்த ஆதாரங்களாக இருத்தல் உணரற்பாலதாகும்.

நம் நாட்டு வரலாற்று ஆராய்ச்சிக்கு இன்றியமையாதனவாக உள்ள கல்வெட்டுகள் எல்லாம் படியெடுத்து அச்சிடப்பெற்று வெளிவரின், உண்மையான பல பல வரலாறுகளை நாம் அறிந்து மகிழலாம் என்பது திண்ணம்.

**3. கடற் பயணங்கள்**

**தமிழரின் கப்பற்கலை**

மழை என்றதும் குழந்தைகளின் நினைவுக்கு வருவது காகிதக் கப்பல். மழை நீரில் காகிதக் கப்பல் விட்டு விளையாடாத குழந்தைகளே இல்லை எனலாம். அந்த அளவிற்கு நம் ஆழ்மனத்தில் கப்பல் இடம் பெற்றுள்ளது. பழங்காலம் முதல் தமிழர்கள் கப்பல் கட்டும் கலையில் சிறந்திருந்ததன் மரபுத் தொடர்ச்சி என்று இதனைக் கூறலாம். தமிழர்கள் கப்பல்களைக் கட்டினர் என்பதற்கும் கப்பல் மூலம்

வெளிநாடுகளுக்குச் சென்றனர் என்பதற்கும் நம் இலக்கியங்களில் ஏராளமான சான்றுகள் உள்ளன . நமக்குக் கிடைத்துள்ள நூல்களிலேயே மிகவும் பழமையானது தொல்காப்பியம். அந்நூல் முந்நீர் வழக்கம் என்று கடற்பயணத்தைக் குறிப்பிடுகிறது. எனவே, தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே தமிழர்கள் கடல் பயணம் செய்துள்ளனர் என்பதை அறியலாம்.

கடலோடா கால்வல் நெடுந்தேர் கடலோடும்

நாவாயும் ஓடா நிலத்து (குறள் 496)

என்னும் திருக்குறள், திருவள்ளுவர் காலத்திலேயே பெரிய கப்பல்கள் இருந்தன என்பதற்குச் சான்றாகும். பூம்புகார் துறைமுகத்திலிருந்து கப்பல்கள் மூலம் பொருள்கள் ஏற்றுமதியும் இறக்குமதியும் செய்யப்பட்டன என்பதைப் பட்டினப்பாலை விரிவாக விளக்குகிறது.

உலகு கிளர்ந்தன்ன உருகெழு வங்கம் (பாடல் 255 )

என்று பெரிய கப்பலை அகநானூறு குறிப்பிடுகிறது. இதனையே பதிற்றுப்பத்து என்னும் நூலும்,

'அருங்கலம் தரீஇயர் நீர்மிசை நிவக்கும்

பெருங்கலி வங்கம்" (பாடல் 52 )

என்று குறிப்பிடுகிறது. சேந்தன் திவாகரம் என்னும் நிகண்டு நூலில் பலவகையான கப்பல்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இதன் மூலம் தமிழர்கள் கப்பல் கட்டும் தொழிலில் பரந்துபட்ட அறிவு பெற்றிருந்தார்கள் என்பதை உணரலாம்.

**நீர்வழிப் பயணத் தொடக்கம்**

நீர்நிலைகளில் மரக்கிளைகள் மிதந்து செல்வதையும் அவற்றின்மீது பறவைகள், தவளைகள் முதலியன அமர்ந்து செல்வதையும் பழங்கால மனிதன் கண்டான். நீரில் மிதக்கும் பொருட்களின் மீது தானும் ஏறிப் பயணம் செய்ய முடியும் என அவன் உணர்ந்தான். மிதக்கும் மரக்கட்டைகள் மீது ஏறி அமர்ந்து சிறிய நீர்நிலைகளைக் கடக்கத் தொடங்கினான். மீன்கள் தம் உடலின் இரு பக்கங்களிலும் உள்ள துடுப்புப் போன்ற பகுதிகளைப் பயன்படுத்தித் தண்ணீரைப் பின்னுக்குத் தள்ளி நீந்துவதைக் கண்டான். தானும் மரத்துண்டுகளைத்

துடுப்புகளாகப் பயன்படுத்தத் தொடங்கினான். பிறகு மரங்கள் பலவற்றை இணைத்துக் கட்டி அவற்றின் மீது ஏறிப் பயணம் செய்தான். அவையே இன்றுவரை வழக்கத்தில் உள்ள கட்டுமரங்கள் ஆகும். அதன் பின்னர் எடை குறைந்த பெரிய மரங்களின் உட்பகுதியைக் குடைந்து எடுத்துவிட்டுத் தோணியாகப் பயன்படுத்தினான். உட்பகுதி தோண்டப்பட்டவை என்பதால் அவை தோணிகள் எனப்பட்டன.

தமிழர்கள் தோணி, ஓடம், படகு, புணை, மிதவை, தெப்பம் போன்றவற்றைச் சிறிய நீர்நிலைகளைக் கடக்கப் பயன்படுத்தினர். கலம், வங்கம், நாவாய் முதலியவை அளவில் பெரியவை. இவற்றைக் கொண்டு தமிழர்கள் கடல் பயணம் மேற்கொண்டனர்.

**கப்பல் கட்டும் கலை**

தமிழர்கள் முற்காலத்திலேயே கப்பல் கட்டும் கலையை நன்கு அறிந்திருந்தனர். கப்பல் கட்டும் கலைஞர்கள் கம்மியர் என்று அழைக்கப்பட்டனர். இதனைக்,

'கலஞ்செய் கம்மியர் வருகெனக் கூஉய்' (காதை 25, அடி 124)

என்னும் மணிமேகலை அடியால் அறியலாம். பெருந்திரளான மக்களையும் பொருள்களையும் ஏற்றிச் செல்லும் வகையில் பெரிய கப்பல்களைத் தமிழர் உருவாக்கினர். நீண்ட தூரம் கடலிலேயே செல்ல வேண்டி இருந்ததால் கப்பல்களைப் பாதுகாப்பானவையாகவும் வலிமை மிக்கவையாகவும் உருவாக்கினர்.

கப்பல் கட்டுவதற்கு உரிய மரங்களைத் தேர்ந்தெடுப்பதில் தமிழர்கள் மிகுந்த கவனம் செலுத்தினர். கப்பல்கள் தண்ணீரிலேயே இருப்பவை என்பதால் தண்ணீரால் பாதிப்பு அடையாத மரங்களையே கப்பல் கட்டப் பயன்படுத்தினர். நீர்மட்ட வைப்பிற்கு வேம்பு, இலுப்பை, புன்னை, நாவல் போன்ற மரங்களைப் பயன்படுத்தினர். பக்கங்களுக்குத் தேக்கு, வெண்தேக்கு போன்ற மரங்களைப் பயன்படுத்தினர். மரத்தின் வெட்டப்பட்ட பகுதியை வெட்டுவாய் என்பர். அதன் நிறத்தைக் கொண்டு மரத்தின் தன்மையை அறிவர். கண்ணடை என்பது இழைத்த மரத்தில் காணப்படும் உருவங்கள் ஆகும். மேலும் சுழி உள்ள மரங்களைப் பயன்படுத்தாமல் தவிர்த்தனர். நீளம், அகலம், உயரம்

ஆகியவற்றைச் சரியான முறையில் கணக்கிட்டுக் கப்பல்களை உருவாக்கினர். இவற்றைத் தச்சுமுழம் என்னும் நீட்டலளவையால் கணக்கிட்டனர். பெரிய படகுகளில் முன்பக்கத்தை யானை, குதிரை, அன்னம் முதலியவற்றின் தலையைப் போன்று வடிவமைப்பதும் உண்டு. கரிமுக அம்பி, பரிமுக அம்பி என்றெல்லாம் இவை அழைக்கப்பட்டன.

மரங்களையும் பலகைகளையும் ஒன்றோடு ஒன்று இணைக்கும்போது அவற்றுக்கு இடையே தேங்காய் நார், பஞ்சு ஆகியவற்றில் ஒன்றை வைத்து நன்றாக இறுக்கி ஆணிகளை அறைந்தனர். சுண்ணாம்பையும் சணலையும் கலந்து அரைத்து அதில் எண்ணெய் கலந்து கப்பலின் அடிப்பகுதியில் பூசினர். இதனால் கப்பல்கள் பழுதடையாமல் நெடுங்காலம் உழைத்தன. இம்முறையை இத்தாலி நாட்டைச் சேர்ந்த மார்க்கோபோலோ என்னும் கடற்பயணி வியந்து பாராட்டியுள்ளார். இரும்பு ஆணிகள் துருப்பிடித்துவிடும் என்பதால் மரத்தினாலான ஆணிகளையே பயன்படுத்தினர். இந்த ஆணிகளைத் தொகுதி என்பர்.

**பாய்மரக் கப்பல்கள்**

காற்றின் உதவியால் செலுத்தப்படும் கப்பல்கள் பாய்மரக் கப்பல்கள் எனப்பட்டன. பெரிய பாய்மரம், திருக்கைத்திப் பாய்மரம், காணப் பாய்மரம், கோசுப் பாய்மரம் போன்ற பலவகையான பாய்மரங்களைத் தமிழர் பயன்படுத்தினர். பாய்மரங்களைக் கட்டும் கயிறுகளும் பல வகையாக இருந்தன. ஆஞ்சான் கயிறு, தாம்பாங்கயிறு, வேடாங்கயிறு, பளிங்கைக் கயிறு, மூட்டாங்கயிறு, இளங்கயிறு, கோடிப்பாய்க்கயிறு என்பவை அவற்றுள் சில. பாய்மரக் கப்பலின் பாய், கயிறு ஆகியவற்றில் பழுது ஏற்படும் பொழுது அவற்றை மரப்பிசின் கொண்டு இணைத்தனர் என்று பரிபாடல் கூறுகிறது.

**கப்பலின் உறுப்புகள்**

கப்பல் பல்வேறு வகையான உறுப்புகளை உடையது. எரா, பருமல், வங்கு, கூம்பு, பாய்மரம், சுக்கான், நங்கூரம் போன்றவை கப்பலின் உறுப்புகளுள் சிலவாகும். கப்பலின் முதன்மையான உறுப்பாகிய அடிமரம் எரா எனப்படும். குறுக்கு மரத்தைப் பருமல் என்பர். கப்பலைச் செலுத்துவதற்கும் உரிய திசையில் திருப்புவதற்கும் பயன்படும் முதன்மையான கருவி சுக்கான் எனப்படும். கப்பலை

நிலையாக ஓரிடத்தில் நிறுத்தி வைக்க உதவும் உறுப்பு நங்கூரம் ஆகும். சமுக்கு என்னும் ஒரு கருவியையும் கப்பல்களில் பயன்படுத்தினர் என்று கப்பல் சாத்திரம் என்னும் நூல் குறிப்பிடுகிறது. இது காந்த ஊசி பொருத்தப்பட்ட திசைகாட்டும் கருவியாக இருக்கலாம் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். கப்பல் செலுத்துபவரை மாலுமி, மீகாமன், நீகான், கப்பலோட்டி முதலிய பல பெயர்களால் அழைப்பர்.

**கப்பலைச் செலுத்தும் முறை**

காற்றின் திசையை அறிந்து கப்பல்களைச் செலுத்தும் முறையைத் தமிழர்கள் நன்கு அறிந்திருந்தனர். இவ்வுண்மையை,

‘நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி

வளி தொழில் ஆண்ட உரவோன் மருக’ (பாடல் 66 )

என்னும் புறப்பாடல் அடிகளில் வெண்ணிக்குயத்தியார் குறிப்பிடுகிறார். கடலில் காற்று வீசும் திசை, கடல் நீரோட்டங்களின் திசை ஆகியவற்றைத் தமிழர்கள் தம் பட்டறிவால் நன்கு அறிந்து அவற்றுக்கேற்ப உரிய காலத்தில் சரியான திசையில் கப்பலைச் செலுத்தினர். திசைகாட்டும் கருவியைப் பயன்படுத்தியும் வானில் தோன்றும் விண்மீன்களின் நிலையை வைத்தும் திசையை அறிந்து கப்பலைச் செலுத்தினர். கப்பல் ஓட்டும் மாலுமிகள் சிறந்த வானியல் அறிவையும் பெற்றிருந்தனர். கோள்களின் நிலையை வைத்துப் புயல், மழை போன்றவை தோன்றும் காலங்களையும் கடல்நீர் பொங்கும் காலத்தையும் அறிந்து தகுந்த காலத்தில் கப்பல்களைச் செலுத்தினர்.

**கலங்கரை விளக்கம்**

கடலில் செல்லும் கப்பல்களுக்குத் துறைமுகம் இருக்கும் இடத்தைக் காட்டுவதற்காக அமைக்கப்படுவது கலங்கரை விளக்கம் ஆகும். உயரமான கோபுரத்தின் உச்சியில் ஒளிவீசும் விளக்கினைக் கொண்டதாக இஃது அமைக்கப்படும். கலம் என்றால் கப்பல். கரைதல் என்றால் அழைத்தல். கப்பலை அழைக்கும் விளக்கு என்னும் பொருளில் இது கலங்கரை விளக்கம் எனப்பட்டது.

பெரிய கப்பல்கள் துறைமுகத்தில் கரைக்கு அருகில் வர இயலாது. எனவே கப்பலில் வரும் பொருள்களைத் தோணிகள் மூலம் கரைக்குக் கொண்டு வந்தனர். இச்செய்தியை,

**கலம் தந்த பொற்பரிசம்**

கழித்தோணியால் கரை சேர்க்குந்து (பாடல் 343) என்று புறநானூறு கூறுகிறது.

முற்காலத்தில் மக்கள் பயணம் செய்வதற்கு மட்டுமன்றிப் போர் புரியவும் கப்பல்கள் பெரிதும் பயன்பட்டன. ஆனால் இக்காலத்தில் பெரும்பாலும் பொருள்களை ஏற்றிச் செல்லவே கப்பல்கள் பயன்படுத்தப்படுகின்றன. அவற்றைச் சரக்குக் கப்பல்கள் என்பர். போருக்குப் பயன்படும் பெரிய கப்பல்களும் இன்று உள்ளன.

இத்தகைய சீர்மிகு கப்பற்கலையில் நம் முன்னோர் சிறந்து விளங்கினர் என்பது நமக்குப் பெருமை அளிக்கும் செய்தியாகும்.

| |
|---|
| நியூசிலாந்து நாட்டு வெலிங்டன் அருங்காட்சியகத்தில் பழங்காலத் தமிழ்நாட்டுக் கப்பல்களில் பயன்படுத்தப்பட்ட மணி ஒன்று இடம்பெற்றுள்ளது. தமிழர்கள் அயல் நாடுகளுக்குக் கப்பல்களில் சென்றனர் என்பதற்கு இதுவும் ஒரு சான்றாகும். பிற்காலச் சோழர்களில் இராசராச சோழனும், இராசேந்திர சோழனும் பெரிய கப்பற்படையைக் கொண்டு பல நாடுகளை வென்றனர் என்பதை வரலாறு பகர்கிறது. |
| “ஆங்கிலேயர் கட்டிய கப்பல்களைப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பழுது பார்க்க வேண்டும். ஆனால் தமிழர் கட்டிய கப்பல்களை ஐம்பது ஆண்டுகள் ஆனாலும் பழுது பார்க்க வேண்டிய அவசியமில்லை‘ என்று வாக்கர் என்னும் ஆங்கிலேயர் கூறியுள்ளார். |
| கடல் ஆமைகள் இனப்பெருக்கத்துக்காகத் தகுந்த இடம் தேடி நீண்ட தூரம் பயணம் செய்கின்றன. அவை செல்லும் வழியைச் செயற்கைக்கோள்கள் மூலம் தற்போது ஆராய்ந்துள்ளனர். அவ்வழியில் உள்ள நாடுகளுடன் தமிழர்கள் வாணிகத் தொடர்பு கொண்டு இருந்ததை அறிய முடிகிறது. எனவே பழந்தமிழர்கள் ஆமைகளை வழிகாட்டிகளாகப் பயன்படுத்திக் கடல் பயணம் செய்து இருக்கலாம் என்னும் கருத்தும் உள்ளது. |

**கடற்பயணம்**

தமிழ்நாட்டு வாணிக வரலாறு மிகவும் தொன்மை வாய்ந்தது. பழங்காலந்தொட்டே தமிழர் உள்நாட்டு, அயல்நாட்டு வாணிகத்தில் சிறப்புற்றிருந்தனர். உள்நாட்டு வாணிகத்தைவிட அயல்நாட்டு வாணிகத்திலேயே வருவாய் மிகுதி. அயல்நாட்டு வாணிகத்திலும் தரைவழியாகச் செய்யும் வாணிகத்தைவிட, நீர் வழியாகச் செய்யும் வாணிகம் பெரும் பொருளைத் தரும். எனவே, அந்நாளில் கடல் வாணிகம் மிகவும் சிறந்திருந்தது.

**தமிழரின் கடற்பயணம்**

திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்னும் ஔவைமொழியும், யாதும் ஊரே யாவரும் கேளிர் என்னும் கணியன் பூங்குன்றன் மொழியும், தமிழர்களின் உலகளாவிய சிந்தனைக்கும் பன்னாட்டுத் தொடர்புக்கும் சான்றுகளாம்.

பழங்காலத்தில், தமிழர் பிற நாடுகளுக்குக் கடற்பயணம் மேற்கொண்ட செய்தி முந்நீர் வழக்கம் எனத் தொல்காப்பியத்தில் குறிக்கப்பட்டுள்ளது. பழந்தமிழர் பொருளீட்டுதலைத் தம் கடமையாகக் கருதினர். இதனைத் தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் இடம்பெற்றுள்ள பொருள்வயிற் பிரிவு விளக்குகிறது. இப்பிரிவு காலில் தரைவழிப்பிரிதல்) பிரிவு, கலத்தில் (நீர்வழிப் பிரிதல்) பிரிவு என இருவகைப்படும்.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழர் மேற்கே கிரீசு, உரோம், எகிப்துமுதல் கிழக்கே சீனம்வரையிலும் கடல்வழி வாணிகத்தொடர்பு கொண்டிருந்தனர். எகிப்து, பாலஸ்தீனம், மெசபடோமியா, பாபிலோனியா, சீனம் ஆகிய நாடுகள் தமிழரின் பொருள்களை விரும்பிப் பெற்றன. ஏலமும் இலவங்கமும் இஞ்சியும் மிளகும் மேற்காசிய நாடுகளில் நல்ல விலைக்கு விற்கப்பட்டன. தமிழ்நாட்டில், பிற நாட்டார் உள்ளத்தைக் கவரும் பல பொருள்கள் மிகுதியாகக் கிடைத்தன. அவற்றுள், முத்தும் பவளமும் ஆரமும் அகிலும் வெண்துகிலும் சங்கும் குறிப்பிடத்தக்கன. பழந்தமிழர், கிரேக்கரையும் உரோமானியரையும் யவனர் என அழைத்தனர்.

**கப்பல்**

பழங்காலத்திலேயே தமிழகத்தில் பலவகையான கப்பல்கள் கட்டப்பட்டன. ஒவ்வொரு பெரிய கப்பலும் மதில்சூழ்ந்த கோட்டைபோலத் தோன்றுமாம். அஃதாவது, நான்கு பக்கமும் நீர் நிரம்பிய கழனிகள். அதன் நடுவில் தனியாக மதிலோடு கூடிய மருதநில அரசனது கோட்டை. அக்கோட்டையின் தோற்றமானது, நடுக்கடலில் செல்லும் கப்பலுக்கு உவமையாகப் புறநானூற்றில் கூறப்பட்டுள்ளது.

**கடலும் மரக்கலங்களும்**

ஆழி, ஆர்கலி, முந்நீர், வாரணம், பௌவம், பரவை,புணரி என்பவை கடலைக் குறிக்கும் தமிழ்ச்சொற்கள். இவ்வாறே மரக்கலத்துக்கும் தமிழ்மொழியில் பெயர்கள் பல வழங்குகின்றன. அவை: கப்பல், கலம், கட்டுமரம், நாவாய், படகு, பரிசில், புணை, தோணி, தெப்பம், திமில், அம்பி, வங்கம், மிதவை, பஃறி, ஓடம் என்பன. ஒவ்வொரு பெயரும் ஒவ்வொரு வகையான கலத்தைக் குறிக்கும். இச்சொற்களைக் கொண்டே பண்டைத் தமிழர்களின் கடற்பயணம் பற்றித் தெளிவாக அறியலாம். உப்பங்கழிகளில் செலுத்துதற்குரிய சிறிய படகுகளும்

கடலில் செலுத்துதற்குரிய பெரிய நாவாய்களும் அன்று இருந்தன. கடலில் செல்லும் பெரிய கலம் நாவாய் எனப்படும். புகார் நகரத்தில் நிறுத்தப்பட்ட நாவாய்கள், அலைகளால் அலைப்புண்டு கட்டுத்தறியில் கட்டப்பட்ட யானை அசைவதுபோல் அசைந்தன. அவற்றின் உச்சியில் கொடிகள் அசைந்து ஆடின எனப் பட்டினப்பாலை கூறுகின்றது.

பெரிய நாவாய்கள் காற்றின் துணைகொண்டே இயங்கின. அவை பாய்மரக் கப்பல்கள் எனப்பட்டன. இதற்குக் காற்றானது, எவ்வெப்போது எவ்வெத்திசை நோக்கி வீசும் என்பதனைத் தமிழர் நன்கு உணர்ந்திருந்தனர். கரிகாலனின் முன்னோர் காற்றின் போக்கை அறிந்து கலம் செலுத்தினர் என்பதனைப் புறநானூற்றுப் பாடல் கூறுகிறது.

**துறைமுகங்கள்**

தமிழகத்தில் நடைபெற்றுவந்த வாணிகத்தின் பயனாகப் பல துறைமுகங்கள் கடற்கரைப் பட்டினங்களாகச் சிறந்து விளங்கின. அவற்றுள் காவிரிப்பூம்பட்டினம், முசிறி, கொற்கை ஆகியவை குறிப்பிடத்தக்கன.

முசிறி, சேர மன்னர்க்குரிய துறைமுகம். அங்குச் சுள்ளி என்னும் பெரிய ஆற்றில் யவனர்களின் மரக்கலங்கள், ஆற்றுத்துறைகள் கலங்கிப் போகும்படி வந்து நின்றன. அக்கலங்களுக்கு உரிய யவனர்கள், பொன்னைச் சுமந்து வந்து, அதற்கு ஈடாக மிளகை ஏற்றிச் சென்றார்கள். இச்செய்தியை, அகநானூறு தெரிவிக்கிறது.

பாண்டிய நாட்டு வளத்தைப் பெருக்கியது கொற்கைத் துறைமுகம். இத்துறைமுகத்தில் முத்துக்குளித்தல் மிகச் சிறப்பாக நடந்ததனை வெனிசு நாட்டறிஞர் மார்க்கோபோலோ குறித்துள்ளார். இங்குச் சங்க காலத்தும் முத்துக்குளித்தல் நடந்தது. ஏற்றுமதிப் பொருள்களில் முத்தே முதலிடம் பெற்றது. மதுரைக்காஞ்சியும் சிறுபாணாற்றுப்படையும் கொற்கை முத்தைச் சிறப்பிக்கின்றன. விளைந்து முதிர்ந்த விழுமுத்து என மதுரைக்காஞ்சி கூறும்.

கடற்கரையை அடுத்து இருக்கும் ஊர்களைப் பட்டினம், பாக்கம் என்றழைப்பர். அவ்வூர்களில் பெரும்பாலும் வணிகர்களே வாழ்ந்து வந்தார்கள். சோழநாட்டின் துறைமுகமாகிய காவிரிப்பூம்பட்டினத்தில் (பூம்புகார்), சுங்கச்சாலையும் கலங்கரை விளக்கமும் இருந்தன.

இங்குக் கப்பலிலிருந்து நிலத்தில் இறக்கப்படுவனவும், நிலத்திலிருந்து கப்பலில் ஏற்றப்படுவனவுமாகிய அளவில்லாத பண்டங்கள் முன்றிலில் மலைபோலக் குவிந்து கிடந்தன.

காவிரிப்பூம்பட்டினத்து மாடங்களில் உள்ள மகளிர் கைகளைக் கூப்பி, வெறியாடும் மகளிரொடு பொருந்தி வேய்ங்குழல் முதலியவற்றை வாசிக்க, நகர் விழாக்கோலம் பூண்டது. தெய்வத்துக்கென எடுத்த கொடிகளும், விலைப்பண்டங்களை அறிவித்தற்குக் கட்டிய கொடிகளும், ஆசிரியர்கள் வாது செய்யக் கருதி வைத்த கொடிகளும், கப்பலின் கூம்பிலுள்ள கொடிகளும் அங்குக் கலந்து காணப்பட்டன.

கடல்வழியே வந்த குதிரைகளும், தரை வழியே வந்த மிளகுப் பொதிகளும், இமயத்திலுண்டான மணிகளும் பொன்னும், குடகு மலையிற் பிறந்த சந்தனமும் அகிலும், கொற்கைத்துறையிற் பிறந்த முத்தும், கீழ்க்கடலில் உண்டான பவளமும், கங்கையில் உண்டான பொருள்களும், காவிரியில் உண்டான வளங்களும், ஈழ நாட்டிலிருந்து வந்த உணவுப் பொருள்களும், பிற நாட்டுப் பொருள்களும், பிற

அரிய பொருள்களும் வந்து சேர, வளம் மிகுந்த பரந்த இடத்தையுடைய தெருக்களாக விளங்கின.

**ஏற்றுமதி இறக்குமதி**

பழந்தமிழகத்தின் வாணிகப்பொருள்களைப் பற்றிய குறிப்புகள் பட்டினப்பாலையிலும் மதுரைக்காஞ்சியிலும் காணப்படுகின்றன. இங்கிருந்து ஏற்றுமதியான பொருள்களுள் இரத்தினம், முத்து, வைரம், மிளகு, கருங்காலி, கருமருது, தேக்கு, சந்தனம், வெண்துகில், அரிசி, ஏலக்காய், இலவங்கப்பட்டை, இஞ்சி முதலியன குறிப்பிடத்தக்கவை.

தமிழகப் பொருள்கள் சீனத்தில் விற்கப்பட்டன. சீனத்துப் பட்டும் சருக்கரையும் தமிழகத்துக்கு இறக்குமதி ஆயின. கரும்பு, அதியமானின் முன்னோர் காலத்தில் சீனாவிலிருந்து கொண்டுவந்து பயிரிடப்பட்டது.

கடற்பயணம்பற்றிய கல்வியறிவு இந்நாளில் மக்களை எட்டியுள்ளது. கடல்சார் பல்கலைக்கழகத்தின் வாயிலாகப் பட்டம், பட்டயக்கல்வி கற்பிக்கப்பெற்று வருகின்றன. இத்துறையில் பயில்வோருக்குப் பயிற்சியும் பணிவாய்ப்பும் நிரம்ப உள்ளன. எனவே, மேலைக்கடல் முழுதும் கப்பல் விடுவோம் என்னும் பாரதியின் கனவு இன்று நனவாகி உள்ளது.